பக்கங்கள்-16 07,மாசி.2021 விலை-30.00


பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்
0776906182

# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


கலையரசி நகைமாடம்
புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -332

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை வெடித்தது மக்கள் புரட்சி அதிர்ந்தது தென்னிலங்கை இலட்சகணக்கில் மக்கள் பங்கேற்பு



## சிங்கள பேரினவாத அரசின் நில ஆக்கிரமிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது போராட்டங்கள் தொடரும் - மாவை



## நான் சிங்கள பௌத்த தலைவன் ஜனாதிபதி சூளுரை

# பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை - வெடித்தது மக்கள் புரட்சி



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் எழுச்சி போராட்டம் கடந்த ஐந்து நாட்களாக இடம்பெற்றது. இந்த போராட்டத்தில் குறைகள் இருந்தாலும் கூட நூற்றுக்கு 95 வீதம் நேர்த்தியான விதத்திலே இடம்பெற்றிருந்தது. சர்வதேசத்திற்கும் இலங்கை அரசிற்கும் ஒரு செய்தியை சொல்லியிருக்கின்றது இந்த எழுச்சி பேரணி. இதில் முதலாவதாக ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி சொல்லவேண்டும். குறித்த ஏற்பாட்டாளர்கள் 25க்கு மேற்பட்டோர் இதில் பங்கேற்றிருந்தனர். இவர்களுடைய ஆளுமை என்பது வியந்து பாராட்டத்தக்க ஒன்று. அவர்களுடைய பின்னணியில் பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்ட இந்த போராட்டத்திற்கு பல தடைகளை இலங்கை அரசு விதித்திருந்தாலும் சாணக்கியன், சுகாஸ் போன்றவர்களின் அதிரடி நடவடிக்கைகளினால் தடைகளை உடைத்து ஆர்ப்பாட்டத்தை முன்கொண்டு செல்ல வழி அமைத்துக் கொடுத்தார்கள்.

பொத்துவிலில் பேரணி ஆரம்பித்த போது பேரணி நடக்குமா என பல அரசியல்வாதிகள் வீடுகளுக்குள் ஒளித்திருந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சுமந்திரன், சாணக்கியன், அரியநேத்திரன், சிறிநேசன், யோகேஸ்வரன், சேயோன், ஜனா, கலையரசன், சயந்தன், உதயகுமார், குணசேகரம், சுகாஸ், சுரேஷ் போன்றவர்களே பொலிஸாரின் தடைகளை உடைத்து முன்னேறி அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றவர்கள். இவர்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் உட்பட சிலர் பொலிஸாரின் தாக்குதல்களுக்கும் உள்ளாகினர். இதில் மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் மோகன் அவர்களின் பங்களிப்பையும் மதிக்க வேண்டும். நீதிமன்ற தடை உத்தரவு, நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் மோகன் அவர்களின் மகன் பேரணியின் முன்னணியில் நின்று செயற்பட்டவர்.

சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் முஸ்லீம் தலைவர்களுடன் பேசியதின் பலனாக அக்கரைப்பற்றில் இருந்து கல்முனை வரை முஸ்லீம் மக்களின் ஆதரவும் கிடைத்ததன் பலனாகத்தான் இரண்டாம் நாள் மட்டக்களப்பில் பேரணி எழுச்சி பெற்றது. இரண்டாம் நாள் பேரணியில் கஜேந்திரன், கஜேந்திரகுமார் தமிழரசுக்கட்சியின் சிறிதரன் ஆகியோர் பங்குபற்றினர். கிழக்கில் இந்த வேலன் சுவாமி பற்றியோ அல்லது வேறு சாமிகள் பற்றியோ அந்த மக்களுக்கு தெரியாது. தமிழ் முஸ்லீம் அரசியல் தலைமைகள் அவர்களின் வழிகாட்டலில் தான் திருகோணமலை வரை தமிழ் முஸ்லீம் மக்களால் இந்த போராட்டம் நடத்தப்பட்டது.

திருகோணமலையை வந்தடைந்த பின்னர் திருகோணமலை சிவில் அமைப்பு என சொல்லிக்கொண்ட ஒரு பாதிரி வாசித்த அறிக்கை முற்றுமுழுதாக அந்த பேரணியின் ஒற்றுமையை குலைக்கும் வகையில் அமைந்தது. அண்மைக்காலத்தில் சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் முஸ்லீம் மக்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்ததால் முஸ்லீம் மக்களுக்கு இவர்கள் மீது நம்பிக்கையும் மதிப்பும் ஏற்பட்டது. இதனால்தான் முஸ்லீம் மக்கள் பெருமளவாக அணிதிரண்டு இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவை வழங்கினர். சுமந்திரனையும் சாணக்கியனையும் சந்திக்கும் மக்கள் தமது ஆதரவை அவர்களுக்கு தெரிவிப்பது இயல்பான ஒன்றுதான்.

ஓட்டமாவடியில் முஸ்லீம் மக்கள் இந்த அரசியல் தலைவர்களுக்கு மாலை அணிவித்தார்கள். மாலையுடன் வருபவர்களிடம் இருந்து அந்த மாலைகளை பறித்தெடுத்து வீச முடியுமா? தந்தை செல்வா காலத்திற்கு பிறகு முஸ்லீம் மக்கள் தங்கள் நேசக்கரங்களை தமிழ் மக்களை நோக்கி நீட்டியிருக்கிறார்கள். அதனை உதாசீனம் செய்ய முடியுமா? முஸ்லீம் மக்கள் நீட்டிய நேசக்கரத்தை சுமந்திரனும் சாணக்கியனும் பற்றி பிடித்திருக்கிறார்கள். அந்த உறவு நிலைக்கவேண்டும் என சொல்லியிருக்கிறார்கள். இது சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களின் காலடியில் கிடக்கும் பிள்ளையான் குழு, டக்ளஸ் குழு, அங்கஜன் குழு, ஆவாக் குழுக்களுக்கும் பிடிக்கவில்லை, தமிழ் தேசியம் என்று சொல்லிக்கொள்ளும் சில அரசியல் கட்சிகளுக்கும் பிடிக்கவில்லை. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை செல்லும் பேரணி இப்பந்தி எழுதும் வரை கிளிநொச்சி வரை சென்றிருக்கிறது. சென்ற இடம் எல்லாம் சாணக்கியனை இளைஞர்கள் பொது மக்கள் சூழ்ந்து கொண்டார்கள். இதற்கான காரணம் என்ன என நாம் பார்க்க வேண்டும். துணிச்சலும் திறமையும் ஆற்றலும் மிக்க இளம் அரசியல் தலைமை ஒன்றை தமிழர் சமூகம் எதிர்பார்க்கிறது. அந்த இளம் தலைமையை சாணக்கியனை வடக்கு கிழக்கில் உள்ள தமிழர் சமூகம் பார்க்கிறது. அதுபோல தமக்காக குரல் கொடுக்கக்கூடிய தமது உரிமைகளுக்காக பேசக்கூடிய இளம் அரசியல்வாதியாக முஸ்லீம் சமூகம் சாணக்கியனை பார்க்கிறது. இது பலருக்கு ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது.

நீண்டநெடும் காலமாக அரசியல் செய்யும் எங்களை விட்டு நேற்று வந்த சாணக்கியன் பின்னால் இளைஞர் சமூகம் செல்கிறதே என்ற எரிச்சலும் கோபமும்பல அரசியல்வாதிகளிடம் இருக்கிறது. இதன் வெளிப்பாடாகத்தான் பேரணியின் முன்னால் வர வேண்டாம் என சில அரசியல்வாதிகளும் வேலன் போன்ற சாமிகளும் பாதிரிகளும் சொல்லியிருக்கிறார்கள். சிங்கள மக்களைப் பொறுத்தவரை புத்த பிக்குகளின் பின்னால் செல்வார்கள். ஆனால் தமிழ் மக்களை பொறுத்தவரை ஆசாமிகளுக்கு பின்னாலேயோ பாதிரிகளுக்கு பின்னாலேயோ செல்லமாட்டார்கள். வேலன் சாமி போன்றவர்கள் அழைப்பு விடுத்தால் முஸ்லீம் மக்கள் வருவார்களா என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

ஓட்டமாவடி, மூதூர், மன்னார் போன்ற இடங்களில் முஸ்லீம் பெண்களும் இந்த பேரணியில் கலந்து கொண்டனர். இதற்கு காரணம் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் அந்த மக்களுக்காக குரல் கொடுத்ததுதான். ஜனாசா எரிப்பு விடயத்தில் தாங்கள் தெரிவு செய்த பிரதிநிதிகள் மௌனமாக இருந்த வேளையில் தமக்காக சாணக்கியன் நாடாளுமன்றத்தில் பேசியதையும் செயற்பட்டதையும் நன்றி உணர்வோடு முஸ்லீம் மக்கள் நோக்குகின்றனர். வடக்கு கிழக்கில் முஸ்லீம் சமூகத்தை ஒதுக்கி வைத்து பகைத்துக்கொண்டு தமிழ் மக்களால் வாழ முடியாது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் வாழ முடியாது. அது போல தமிழ் மக்களை பகைத்துக்கொண்டு முஸ்லீம்களால் வாழ முடியாது. இந்த யதார்த்தத்தை முஸ்லீம் மக்கள் இன்று உணர்ந்துள்ளனர். இதனால் தான் தந்தை செல்வநாயகத்தின் காலத்தின் பின் மீண்டும் தமிழ் முஸ்லீம் சமூகங்கள் இன்றுஇணைந்திருக்கின்றன. இந்த இணைப்பைஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகித்தவர்கள் சுமந்திரன், சாணக்கியன் போன்றவர்களே.

இது பிள்ளையான், டக்ளஸ் போன்ற சிங்கள பேரினவாத அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒட்டுக்குழுக்களுக்கு மட்டுமல்ல இந்த பேரணியில் செல்லும் சில அரசியல்வாதிகளுக்கும் பொறுக்க முடியாமல் இருக்கிறது. மறுபுறத்தில் வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லீம் மக்கள் பேரணியில் அணி திரண்டிருப்பது தங்களின் அழைப்பை ஏற்றுத்தான் என காவி உடைதரித்த, பாவாடை தரித்த ஆசாமிகள் நினைத்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய நிலையை பார்க்கும் பொழுது நாட்டில் ஒரு பரபரப்பான சூழல் காணப்படுகிறது. அதுபோன்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான அறவழிப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஐந்து நாட்களாக மன்னாரை சென்றடைந்து, அதன் பின்னர் யாழ்ப்பாணத்தை சென்றடைந்த நடவடிக்கைகள் நேற்றைய 7ஆம் திகதியுடன் இந்த புரட்சிகர போராட்டம் முடிவடைந்த நிலையில் இந்த ஆர்ப்பாட்ட மக்கள் புரட்சியினூடாக தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வினை பெற்றுக்கொடுக்க முடியும்என்ற ரீதியிலே தொடர்ந்தும் மக்கள் தமது போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பொலிசாரும் இராணுவத்தினரும் உளவுப் பிரிவினரும் இணைந்து சில நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். அந்த விடயங்களை பொறுத்த வரையிலும் தடுத்து நிறுத்துகின்ற நடவடிக்கைகளை அவர்களும் பெரும்பான்மையாக மேற்கொள்கிறார்கள். தடுத்து நிறுத்துகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதன் ஊடாக சில தடங்கல்கள் ஏற்படுகின்ற பொழுதிலும் தொடர்ந்தும் அந்த போராட்டம் மிக வேகத்துடன் பயணித்துக் கொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்தப் போராட்டம் ஏன் ஆரம்பிக்கப்பட வேண்டும்? எதற்காக அந்த போராட்டத்தை கொண்டுசெல்ல வேண்டும் என்று கருதினால் உண்மையிலே அடக்குமுறைக்கு எதிராக நாங்கள் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த அடக்குமுறையின் சில தடைகளை உடைத்துக்கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு செல்வதனூடாக தான் இந்த அரசாங்கம் நமக்கான ஒரு தீர்வை தரும் என்ற பாணியில் தான் இந்த நடவடிக்கைகள் இருக்கின்றன.

ஆகவே அவ்வாறு தடைகளையும் தாண்டி இந்த ஊர்வலங்கள் செல்கின்றபொழுது பாரியதொரு சிக்கலை தோற்றுவிக்கக்கூடிய நிலைமைகள் அங்கு காணப்படுகிறது. ஆகவேபொலிசார் தடை உத்தரவுகளை மீறி அவர்கள் வருகின்ற காட்சிகளைகூட நாங்கள் பல இடங்களிலே பார்த்திருக்கின்றோம். ஏன் இவ்வாறு பொலிசார், இராணுவத்தினர் செயற்படுகிறார்கள் என்றதொரு நிலைமை தற்பொழுது உருவாகியிருக்கிறது. ஆகவே இவற்றை கட்டுப்படுத்துவதற்கான ஒரு தீர்மானமாக அரசாங்கம் செயற்படவில்லை. ஆனால் அரசாங்கத்தினுடைய போராட்டங்கள் அவர்களுடைய நிகழ்ச்சி நிரல்கள் ஊடாக நடத்தப்படுகின்ற போராட்டங்கள் சரியான முறையிலே நடைபெறுகிறது. சரியான முறையிலே அவை பயணிக்கின்றது.

**தொடரும்...**

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை – மீண்டும் பலத்தை நிரூபித்த தமிழினம்

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் பேசும் மக்களின் போராட்டம் மட்டக்களப்பின் அம்பாறை பொத்துவிலில் ஆரம்பித்து யாழ் பொலிகண்டியில் சத்தியப்பிரமாணம், நினைவுத்தூபி திரைநீக்கத்துடன் நிறைவுக்கு வந்துள்ளது. தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாத அரசுகளினால் தொடர்ச்சியாக எதிர்நோக்கும் பிரச்சினைகளான பௌத்த மயமாக்கல். தமிழர் வாழ் பிரதேசங்களை தொல் பொருள் ஆராய்ச்சிகள் என்கிற பெயரில் அபகரித்தல். மகாவலி அபிவிருத்தி அதிகார சபை என்கிற போர்வையில் சிங்களக் குடியேற்றம். முஸ்லீம்களின் ஜனாசா விடயத்தில் அரசின் மனிதாபிமானமற்ற செயல். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் எவ்வித குற்றங்களும் நிரூபிக்கப்படாமல் பல வருடங்களாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாமை. காணாமற் போனோர். போர்க்குற்றம் போன்றவற்றுக்கான நீதியை மீண்டும் ஒருமுறை சர்வதேச மட்டத்தில் உரத்துக்கூறும் வகையில். தமிழ் மக்களின் பலத்தை மீண்டும் நிரூபிக்கும் வகையில். ஒட்டுமொத்த வடகிழக்குத் தமிழர்கள். மதத் தலைவர்கள். சிவில் அமைப்புக்கள். அரசியல்வாதிகள் என இலட்சக்கணக்கானோர் இணைந்து இப்போராட்டத்தை நடத்தி முடித்திருக்கின்றனர்.

இலங்கையரசின் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிசார். இராணுவத்தினரின் கடும் தடைகளை மீறி இலங்கை பாதுகாப்புத் தரப்பின் தீவிர கண்காணிப்பின் மத்தியில் இப்போராட்டம் தமிழினத்தால் வெற்றிகரமாக நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் மார்ச் மாதமளவில் ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஆரம்பிக்கவிருக்கும் இந்நிலையில் இப்போராட்டம் சர்வதேச ரீதியாக அதிக கவனம் பெறும் ஒன்றாக மாறியிருக்கிறது.

இலங்கை சுதந்திரமடைந்து 73 ஆண்டுகள் நிறைவடைந்த போதிலும் தமிழினம் இதுவரை சுதந்திரமின்றி தமது உரிமைகளுக்காக விடுதலைக்காக தமது உறவுகளை தொலைத்துவிட்டு வீதிகளில் இன்றும் போராடி வருகின்றனர். கடந்த 30 வருடாங்களுக்கு மேலாக தமிழினத்தின் விடுதலைக்காக போராடி வந்த தமிழீழ விடுதலைப்புலிகளை உலக நாடுகளின் உதவியுடன் அழித்தொழித்த அதே ராஜபக்ஷவின் புதல்வர்கள் மீண்டும் அரியணையில் அமர்ந்திருக்கும் இந்நேரத்தில் எதிர்பார்த்ததைப்போல தமிழினமும் வடகிழக்கும் மீண்டும் அரசின் அடக்குமுறைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. செம்மலை பிள்ளையார் கோவில். குருந்தூர் மலை. கன்னியா வெந்நீருற்று என தொடர்ந்தும் தமிழ் மக்களது வணக்கஸ்தலங்கள் அரசினால் ஆக்கிரமிக்கப்பட்டு வரும் நிலையில். வடகிழக்கில் பௌத்த விகாரைகள் துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. ஒரு ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் அஹிம்சையை ஆயுதமாக தமிழினம் கையிலெடுத்துள்ளது. தமிழ் பேசும் மக்களின் ஒன்றிணைவு என்பது வரவேற்கத்தக்கது. தொடர்ந்தும் தமிழினம் பலமாகத்தான் இருக்கிறது என்பதை அரசிற்கும் சர்வதேசத்திற்கும் மீண்டுமொருமுறை தமிழினம் நிருபித்துக்காட்டியிருக்கிறது.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

135



புரிந்து கொள்வதற்கான ஒலிச்சைகை அல்லது குறியீட்டுச் சைகை அவசியம் நிர்ணயிக்கப்பட வேண்டும். இது தவிர ஒவ்வொரு கெரில்லாவும் தாக்குதலுக்காகவும் பின் வாங்கலுக்காகவும் நியமிக்கப்பட்ட சைகைகளைத் (ஒலிச் சைகை மற்றும் ஒளிச்சைகை) தெரிந்திருக்க வேண்டும். எதிரியால் பயன்படுத்தப்படுவதோடு ஒப்பிடுகையில் இச்சைகைகள் பூரணமாக மாறுபட்டவையாக இருக்க வேண்டுமென்பது மிக முக்கியமானதாகும். பின் வாங்கலின்பின் ஒன்று சேருமிடத்தைத் தெரிந்து வைத்திரு.

வெவ்வேறு திசைகளிலிருந்து கெரில்லாக்கள் ஒரேநேரத்தில் தாக்குவதன் மூலமே வெற்றிகரமான தாக்குதலை எட்டலாம். மக்கள் வாழ்விடத்தின் வெவ்வெறு பகுதிகளிலிருக்கின்ற பாசிசப் படைகள் மீதும் மிக முக்கிய இலக்குகள் மீதும் கெரில்லாக்கள் உடனே தாக்குகின்றார்கள். இதற்கான படைப்பலம் இல்லாவிட்டால், தொடக்கத்தில் எதிரிப் படைகளை அழி, அதன்பின் தனியான இலக்குகளைச் சிதைப்பதற்கு இறங்கு.பாசிசப்படைகள் இருக்கின்ற இடத்தில் வைத்தே அவர்களை அழி, அவர்களை ஒன்றுசேர விடாதே, பின்வாங்கல் பாதைகள் சகலதையும் அறுத்துவிடு, எதிரி சிதறிப்போகும் வண்ணம் அடிகொடு. எதிரியின் கட்டுப்பாட்டிலுள்ள தற்காப்புக்குத் தயார்ப் படுத்தப்பட்டுள்ள நிலையொன்றைப் பின்வரும் ஒழுங்கில் தாக்கலாம். கெரில்லாக்களின் முன்னணிக் குழுக்கள் சந்தடியின்றிக் காவல் கடமையாளர்களை மடக்கி அல்லது அவர்களை மேவிச்சென்று,எதிரியின் சூட்டு நிலைகள், பதுங்குகுழிகள், பதுங்கிடங்கள் போன்றவற்றின் மீது திகைப்புத் தாக்குதலைத் தொடுப்பார்கள். மக்கள் வாழ் விடத்தின் வெளிவட்டத்திலுள்ள பாசிசப் படைகளின் ஆளணிகளைக் கெரில்லாக்கள் தோற்கடித்து, அவர்களின் சூட்டு நிலைகளையும் தொடர்புக்கான கடத்திகளையும் அழிப்பார்கள். இவை யாவும் இரண்டாவது குழுக்களைச் சேர்ந்த கெரில்லாக்களின் செயற்பாட்டை இலகுவாக்குகின்றன. இரண்டாவது குழுக்கள் வேகமாக மிக முக்கிய இலக்குகளுக்குள் ஊடுருவி,எதிரியின் பிரதான ஆட்பலத்தை அழிப்பார்கள். இலக்குகளிலுள்ள தற்காப்பாளர்களின் எதிர்ப்பைத் தகர்ப்பார்கள். கைதிகள், எதிரியின் ஆயுதங்கள், ஆவணங்கள், குறிப்புகள் போன்ற பலவற்றைக் கைப்பற்றுவார்கள். தனியான இலக்குகளை ஒரேநேரத்தில் தாக்குவதுபிரதானமானதாகும்.இதன் போது திடமாகவும் விரைவாகவும் செயற்படு. உன்னிடம் இருக்கின்ற சகலவகையான சூட்டாயுதக் கருவிகளையும் விரிவான முறையில் பயன்படுத்து இது எதிரியிடத்தில், கெரில்லாப்படைகள் கணிசமானளவு கூடுதலாக இருக்கின்றார்கள் என்ற மனவுணர்வைத் தோற்றுவிக்கின்றது. இலக்கைச் சகல பக்கத்தாலும் முற்றுகையிட முயற்சிசெய்வதுடன் அது பூரணமாக அழிக்கப்படும் வரை அதன்மீதான அழுத்தத்தைக் குறைக்காதே.

மக்கள் வாழ்விடத்தின் உள்ளே எதிரியின் பலமான எதிர்ப்பையும் அவனது எதிர்த்தாக்குதலையுங்கூட எதிர்கொள்ள வேண்டிய நிலை இலக்குகளின் மீது தாக்குதல் தொடுக்கின்ற குழுக்களுக்கு ஏற்படலாம். இந்தச் சூழ்நிலைக்காகவென கெரில்லாக்களின் சேமப்படை நியமிக்கப்படுகின்றது. இதனால் தமது தோழர்களுக்கு உதவி புரிவதற்காக வேகமாக வரமுடியும். மக்கள் வாழ்விடத்திலுள்ள எதிரி மீது தாக்குதல் தொடுப்பதற்காக கெரில்லாக்கள் ஆரம்ப இடமொன்றில் இருக்கின்ற அதேநேரத்தில் அவர்கள் பலமான சமர்த் தற்காப்பை நியமித்திருக்கவும் வேண்டும். இது பாசிஸ்டுக்கள் அந்த வாழ்விடத்திலிருந்து தப்பியோடுவதைத் தடுப்பதற்கும் அருகிலுள்ள பிரதேசத்திலிருந்து வருகின்ற எதிரியின் தாக்குதலைத் தடுப்பதற்கும் அவசியமாகும்.

கெரில்லாக்களின் முறியடிப்பு வீரர்கள் கூடுதலான அளவில் எதிர்த்தாக்குதல் சாத்தியமான இடத்தில் இருப்பதுடன் தங்களது இடத்திலிருந்து முன்னுக்கும் பக்கங்களுக்கும் பார்வைத் தொடர்பு வைத்திருக்கின்ற அளவு தூரத்தில் இது காவற்கடமையாளர்களையும் நிறுத்துவார்கள். இவ்வாறான நடவடிக்கை நடைபெறுகின்ற முழு நேரத்திலும் அந்த மக்கள் வாழ்விடம் ஏனைய உலகிலிருந்து தொடர்பற்ற நிலையிலிருக்கின்றது. மக்கள் வாழ்விடத்திலிருந்து வெளியேறுகின்ற சகல மக்களையும் முறியடிப்பு அணி தடுக்கின்றது. மக்கள் வாழ்விடத்திலுள்ள எதிரிமீது தாக்குதலைத் தொடுக்கின்றபோது கெரில்லாக்களின் தனிப்பட்ட குழுக்களுக்கும் சகல நடவடிக்கைக்கும் தலைமை தாங்குகின்ற கட்டளை யாளனுக்குமிடையில் நம்பகரமான தொடர்பை ஒழுங்குபடுத்துவது மிகவும் சிரமமாகும். ஏனெனில் சகல நடவடிக்கையும் உச்ச வேகத்தில் நடைபெறுகின்றது. இந்த நோக்கத்திற்காகவென ஒவ்வொரு கெரில்லாக் குழுக்கள், சேமப்படை, முறியடிப்பு அணி போன்றவற்றிலிருந்து செய்தி தெரிவிப்பவர்கள் நியமிக்கப் படுகின்றனர். அவர்கள் சகல செய்திகளையும் கட்டளைகளையும் கொண்டு சென்று தெரிவிக்கின்றனர். எதிரி வீதிச் சமர் நடவடிக்கைக்கு இறங்க முயற்சிக்கலாம். இதற்காகத்தான் தாக்குதலை ஆரம்பிக்கின்ற முன்னணிக் குழுக்களைச் சேர்ந்த (2, 3 கெரில்லாக்கள்) ஒவ்வொரு கெரில்லாவும் அந்த மக்கள் வாழ்விடத்திலுள்ள எதிரியின் சகல தடையரண்களையும் காப்பகழிகளையும் அந்நேரத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வீதிச் சமருக்காக இந்தக் கட்டுமானங்களைப் பாசிஸ்டுக்கள் பயன்படுத்த கெரில்லாக்கள் இடந் தரமாட்டார்கள். ஏனைய கெரில்லாக் குழுக்கள் எதிரி இலக்குகள் மீது தாக்கிக் கொண்டிருக்க, முதலாவதாக வீதிச்சமரில் கெரில்லாக்களின் சேமப்படையே இறங்குகின்றது. இரண்டாந்தர இலக்குகளை (களஞ்சியங்கள், துணைப் பணியகங்கள், போக்குவரத்து ஊடகங்கள் போன்றவாறானவை) அழித்துப் பணிகளை முடித்த ஏனைய கெரில்லாக்கள் சேமப்படைகளுடன் இணைந்து கொள்கின்றனர்.

மிக அவசியம் ஏற்படும் சமயங்களில் தொடர்பாளர்கள் பிரிவையும் பயன்படுத்தலாம். சேமப்படைக்கு கெரில்லாக்களின் ராங்கியெதிர்ப்பாளர் குழுக்கள், அத்துடன்,யந்திரச்சுடுகலனாளர்கள் போன்றோரே ஆளணியாகத் தரப்படுகின்றனர். ஒரு பகுதி இயந்திரச் சுடுகலன்களை வீதிகளையும் சதுக்கங்களையும் சுடக்கூடிய வகையில் நிலைப்படுத்துவது அவசியமாகும். எதிரி திடமான எதிர்ப்பை வெளிக்காட்டுகின்ற கட்டடங்களை அழிப்பதற்கான தகர்ப்புச் சாதனங்கள், எரியூட்டும் பொருட்கள் போன்றனவற்றைச் சேமப்படை தயார்ப்படுத்தி வைத்திருக்க வேண்டும். வீதிச் சமரின் பிரதான விதிமுறைகளை நினைவிற்கொள் : தற்காப்பிற்குத் தயார்ப்படுத்தப்பட்ட கட்டடங்களுக்குள்ளேயே எதிரி அதிகமாக மறைந்துகொள்வான். நிலக்கீழ் அறைகளைக் கொண்ட கட்டடங்கள், காப்பகழிகளைக் கொண்ட வீடுகள், மாடிக் கட்டடங்கள், முகட்டறைகள், கூரைக்குக்கீழுள்ள சாளரங்கள், புகைபோக்கிக் குழாய்கள் போன்றனவே அவையாகும். சந்துகளிலுள்ள மூலை வீடுகளிலிருந்து அவன் கடப்பு வீதிகளுக்குச் சுடுவான். வாயில்கள், வீட்டுத் தோட்டங்கள், தோட்டங்கள் போன்ற இடங்களிலும் எதிரிச் சூட்டு நிலைகள் உருவாக்கப்பட்டிருக்கும்.

தொடர்வான்...

**நெற்றிப்பொறியன்**

# புலம்பெயர் தமிழர்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைப்போராட்டம் சாத்தியமா?




உலகில் அடக்கியொடுக்கப்பட்ட இனங்களின் உரிமைக்கான இன விடுதலைப்போர்கள் பல தேசங்களில் இடம்பெற்று வந்தன. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் பாகிஸ்தான் இடமிருந்து பங்களாதேஷ் பிரிந்து செல்ல இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் இந்தியாவின் ஆதரவுடன் பங்களாதேஷ் என்ற நாடு உதயமாகியது. கொரியா என இருந்த ஒரு நாடு இரு நாடுகளாக பிரிந்த நிலை, இஸ்ரேல் - பாலஸ்தீனம் வியட்னாம் போர், ரஷ்யாவின் பிடிக்குள் இருந்த ஆப்கானிஸ்தான் என நாடுகளும் நாடுகளுக்குள் சிறுபான்மை இனம் அடக்கியொடுக்கப்படும் பொழுது அவ் அடக்குமுறைகளுக்கு எதிரான அகிம்சை போராட்டங்கள் வலுவிழந்து ஆயுதப்போராட்டமாக உருவெடுத்து பல நாடுகளில் இனவிடுதலைப்போராட்டங்கள் இடம்பெற்றன. அந்த வகையில் ஐரீஸ் போராட்டம் வெற்றி பெற்றது. பாலஸ்தீனம் ஓர் அங்கீகாரம் பெற்றது. அவ்வாறான சில போராட்டங்கள் வெற்றிபெற்றன.

இப்போராட்டங்கள் வெற்றிபெற ஏதாவது ஒரு பலம் பொருந்திய நாடு அங்கீகரிக்கவேண்டிய சூழ்நிலை காணப்பட்டு அவ்வாறான போராட்டங்கள் வெற்றிபெற சில வல்லரசு நாடுகள் ஆதரவு வழங்கி அப்போராட்டங்கள் வெற்றியும் பெற்றன. ஈழத்தில் இடம்பெற்ற தாயக மீட்புக்கான போராட்டமானது தமிழ் மக்களின் இருப்பையும் அவர்களது சுயநிர்ணய உரிமையை பாதுகாக்கவும் அடக்குமுறைகளை உடைத்து ஒரு தனி உரிமை பெற்ற இனமாக இருக்க அப்போராட்டம் இடம்பெற்றது. இப்போராட்டத்துக்கு ஆரம்பகாலங்களிலும் சரி அதன் பின்னரும் சரி உலகின் வல்லரசு என்னும் நிலையில் உள்ள இந்தியா உதவிகள் பல புரிந்தது.

ஆனால் அவ் உதவிகள் தனது பிராந்திய நலன்சார்ந்தே காணப்பட்டது. தமிழர்களின் சுய உரிமைப்போராட்டத்துக்கு இந்தியாவின் ஆதரவானது எப்பொழுதும் தனது கட்டுப்பாட்டை மீறி செல்லாத வகையில் இப்போராட்டங்கள் தனது நாட்டின் பிராந்திய நலனுக்கு பங்கம் விளைவிக்காத வரையிலும் தொடர்ந்து செல்ல அனுமதித்தது. அத்துடன் பல போராட்ட இயக்கங்களை உருவாக்கி அவை அனைத்துக்கும் ஆயுதங்களை வழங்கி எல்லா இயக்கங்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து இப்போராட்ட இயக்கங்களை வைத்து இலங்கை அரசையும் தனது காலடியில் வைத்திருக்க அது முயற்சித்தது. இதில் சில இயக்கங்கள் இந்தியாவின் சுயநல பிராந்திய நலன் என்னும் மாயைக்குள் சிக்கி சின்னாபின்னமாகின. விடுதலைப்புலிகள் அமைப்பு இவ் மாய வலைக்குள் சிக்காமல் தப்பிக் கொண்டது.

இந்தியா என்கின்ற மிகப்பெரும் ஜனநாயக நாடு தனக்கு அருகிலுள்ள பகை நாடுகளான பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளை சமாளிக்க அல்லது அவ் நாடுகளை கண்கானிக்க இலங்கை மிகவும் தேவைப்பட்ட நாடாக காணப்பட்டது. இலங்கை, சீனா பக்கமோ அல்லது பாகிஸ்தான் பக்கமோ செல்லும்படி தமிழ் போராட்ட அமைப்புகளை வைத்து இலங்கையை தனது பிடிக்குள் 1970 களில் இருந்து வைத்திருக்க முனைகின்றது. இந்நிலையில் விடுதலைப்புலிகளின் தனி நாடு கோரிய ஆயுதப் போராட்டமானது 1985 களின் பின்னர் வீரியம் கொண்ட நிலையில் 1987ஆம் ஆண்டு இந்தியா இலங்கை ஒப்பந்தம் ஊடாக தனது நாட்டு இராணுவத்தை அமைதிப்படை என இலங்கைக்கு அனுப்பி தெற்காசியப் பிராந்தியத்தில் தனது இராணுவ வலிமையை மேலும் ஒருமுறை செயல்படுத்தியது. ஆனால் அந்த இராணுவ வலிமையானது இந்தியாவுக்கு தோல்வியில் முடிந்தது. பெரும் தோல்வியுடன் இலங்கையை விட்டு வெளியேறியது. அதன் பின்னர் விடுதலைப்புலிகளின் போராட்டமானது பல கட்டமைப்புகளை உருவாக்கி தனிநாட்டு செயல்திட்டங்களுக்கு அமைவாக தளம் அமைக்கப்பட்டு ஒரு நாட்டுக்குரிய சகல கட்டுமானங்களையும் அவர்கள் உருவாக்கினர். அதில் குறிப்பிடும்படியாக தரைப்படை, கடற்படை, காவல்துறை, நீதித்துறை, நிதித்துறை என்பன அவற்றில் சிலவாகும். இறுதியில் விமானப்படை கட்டமைப்பையும் உருவாக்கினர்.

இவ்வாறான நிலையில் உலக வல்லரசுகள் விடுதலைப்புலிகளின் அபரீதமான வளர்ச்சியில் தமிழர்களின் உரிமை நோக்கியதான போராட்டத்தையும் சகித்துக்கொள்ள முடியாமல் 2009 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு உரிமைப்போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஆரம்பத்தில் உதவி செய்த இந்தியாவும் உலக வல்லரசுகளும் இணைந்து முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைத்தனர். இன்று தமிழர்களின் சுய உரிமை, தேசியம் என்பன மீண்டும் தொடக்கப்பட்ட புள்ளியிலே நிற்கின்றது.

விடுதலைப்புலிகள் அமைப்பு இருந்த காலத்தில் அவர்களால் உருவாக்கப்பட்ட அரசியல்ரீதியானகட்சியானதமிழ்தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகள் காலத்தில் தேசியம், சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டு அமைவாக செயல்பட்டு வந்த நிலையில் முள்ளிவாய்க்கால் மண்ணில் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது தனது தேசியம், சுயநிர்ணயம் என்ற நிலைப்பாட்டை விட்டு விலகி செல்வதை காணக்கூடியதாக உள்ளது. ஆரம்பத்தில் கூட்டமைப்பில் முதலமைச்சர் ஆக்கப்பட்ட திரு.விக்னேஸ்வரன் அவர்களும் கூட்டமைப்பின் தாயகம், தேசியம் என்ற கொள்கையை விட்டு விலகுவதால் அக் கொள்கையில் தாம் உறுதியாக இருப்பதாக கூறி கூட்டமைப்பை விட்டு விலகி தனிக் கட்சிகளை உருவாக்கி செயல்பட்டு வருகின்றனர். அவர்களது தாயகம், தேசியம் சுய உரிமை என்பன வாய்ப்பேச்சில் மட்டும் தான் உள்ளது என்பது மெதுவாக தெரிய வருகின்றமை அண்மையில் இடம்பெறும் அவர்களின் செயற்பாடுகள் புடமிட்டு காட்டுகின்றது.

இந்நிலையில் புலம்பெயர் தேசங்களில் தேசியம், சுயநிர்ணயம் போன்றவற்றில் பல கட்டமைப்புகள் தொடர்ந்தும் உறுதியாக செயற்பட்டு வருகின்றமை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. உலகெங்கும் இவ் கோரிக்கையுடன் உடன்பட்டு சுமார் 450 அமைப்புகள் செயற்பட்டுவந்த நிலையில் இலங்கை அரசானது இதில் 240 அமைப்புகளை நாட்டுக்குள் வர தடைவிதித்துள்ளது. இதில் T.R.O வும் அடங்குகின்றது. இவ்வமைப்புக்கள் இலங்கைக்குள் வர முடியாது. அத்துடன் இவ் அமைப்புகள் மூலமாக வெளிநாடுகளில் செயற்பட்ட சிலர் இலங்கை புலனாய்வாளர்களால் பல நாடுகளில் கொலை செய்யப்பட்டுள்ளமையும் இங்கு கூர்ந்து நோக்கவல்லது. இருந்தபோதிலும் நாடு கடந்த தமிழீழ அரசும் மற்றும் தேசியம் பால் உறுதியாக உள்ள புலம்பெயர் அமைப்புக்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. விடுதலைப்புலிகள் அமைப்பை அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், கனடா போன்ற நாடுகள் தடை செய்த நிலையில் அங்கு விடுதலை போராட்டத்துக்கு நிதி சேகரிப்பது அல்லது அந்நாட்டு இறைமைக்கு பங்கம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்டால், ஆயுதப்போராட்டம் சம்பந்தமான விடயங்களில் ஈடுபட்டால் உடனடியாக கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்படும் நிலையிலும் புலம்பெயர் அமைப்புகளின் செயற்பாடுகள் இடம்பெற்று தான் வருகின்றன.

குறிப்பாக வடகிழக்கு பகுதிகளில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இறுதிப்போரில் இறந்ததமது உறவுகளுக்கு கூட அஞ்சலி செலுத்துவதற்கு இலங்கை அரசு தடைவிதித்துள்ள நிலையில் புலம்பெயர் தேசங்களில் மிக எழுச்சியுடனும் உணர்வுபூர்வமாகவும் இடம்பெற்று வருவதை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக கனடா, நோர்வே, தென் ஆபிரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளிலும் இந்தியாவின் தமிழ் நாட்டிலும் மிக எழுச்சியுடன் இடம்பெற்று வருகின்றது. அத்துடன் ஐ.நா மனித உரிமை செயலகத்தில் வருடா வருடம் இடம்பெறும் கூட்டத் தொடர்களில் புலம் பெயர் அமைப்புகள் தமது அழுத்தத்தை கொடுத்து வருவதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் இலங்கையில் நடந்த போர்க்குற்ற விசாரனைகளை துரிதப்படுத்த உலக நாடுகள் எங்கும் கவனயீர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாடு கடந்த தமிழீழ அரசுக்கு ஓர் அங்கீகாரம் கிடைத்துள்ளமை அண்மைய செயல்பாடுகளில் இருந்து தெரியவருகின்றது. அத்துடன் யாழ் பல்கலைக்கழக நினைவு தூபி இடித்தொழிப்பின் போது கனடா, பிரிட்டன், பிரான்ஸ், நோர்வே, தமிழகம் என அனைத்து பகுதிகளிலும் கண்டனப் போராட்டங்கள் இடம்பெற்றன. இப் போராட்டங்களையடுத்து கனடா ஒரு மாநிலத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுதூபியை அமைப்பதற்கு அம்மாநில மேயர் முன்வந்துள்ளமையானது தமிழர்களின் புலம்பெயர்வு போராட்டங்களுக்கு ஓர் விடிவு கிடைப்பது போல் தென்படுகின்றது.

புலம்பெயர் அமைப்புக்கள் எல்லாம் ஒரு அணியில் இணைந்து செயல்படுதல் இன்றைய காலவோட்டத்தில் மிக முக்கியமாகும். புலம்பெயர் நாடுகளில் உள்ள அனைத்து தமிழ் உறவுகளும் மற்றும் அமைப்புகளும், தமிழகத்தில் உள்ள ஈழ உணர்வாளர்கள் அனைவரும் அதேநேரம் வடகிழக்கு பகுதியில் உள்ள தேசியம், சுய உரிமை என்னும் கொள்கையில் தடம் மாறாமல் இருக்கும் தமிழ்க் கட்சிகளும் எல்லாம் ஓர் நேர்கோட்டில் பயணித்தால் எமக்கான இழப்புகளுக்கு ஓர் விடிவு கிடைக்கும்.

புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்கள் தங்கள் இருப்பை தக்கவைத்து கொள்வதற்கு விடுதலைப் போராட்டத்தையும் அதற்காக உயிர்நீத்த போராளிகளின் தியாகங்கள் மீதேறி செயல்படாமல் தாயகம், போராட்ட காலங்களில் அளப்பரிய உதவி களை செய்தவர்களின் தியாகங்களில் குளிர்காயாமல், வெறுமனவேகொடிகளை பிடித்து கூக்குரல் இட்டு செயல்படாமலும், இதய சுத்தியுடன் ஒரு தீர்க்கமான போராட்ட செயல்பாட்டை மேற்கொண்டு எமது இனத்தின் விடுதலைக்கு வழிசமைக்க உறுதிபூணுவதே காலத்தின் தேவையாகும்.

**தமிழ் கிறுக்கன்**

# தொல்பொருள் ஆராய்ச்சிகள் என்கிற பெயரில் சிங்களப் பேரினவாத அரசின் ஆக்கிரமிப்பினை ஏற்றுக்கொள்ள முடியாது - மாவை சேனாதிராஜா



**கேள்வி : வடகிழக்கில் தொல்பொருள் ஆராய்ச்சிகள் என்கிற பெயரில் தமிழர் பிரதேசங்கள் சுரண்டப்படுகின்றது. அங்கு பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. இது தொடர்பாக உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : இக்காலகட்டத்தில் குறிப்பாக கோட்டபாய ராஜபக்ஷ அவர்கள் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பௌத்த சிங்கள பெரும்பான்மைத்துவ ஆட்சி என்கிற சிந்தாந்தக் கோட்பாட்டுடன் அவர் செயற்பட்டு வருகின்றார். ஒரு இராணுவ வீரனாக ஒரு அதிகாரியாக இருந்தவர். நாட்டை விட்டுச் சென்று அமெரிக்காவில் வாழ்ந்துவிட்டு போர்க்காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரன் என்பதால் படையை வழிநடத்துகின்ற ஒரு செயலாளராக பொறுப்பிலிருந்தவர். அவர். தான் விடுதலைப்புலிகளை அழித்தவன் என்கிற தோற்றத்தை சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறார் என்றுதான் நாங்கள் நம்பவேண்டி இருக்கிறது. அவரது சகோதரரை விட அரசியல் ரீதியாக செயற்படாத ஒருவரை இராணுவ ரீதியாக செயற்பட்ட ஒருவர் நேரடியாக களத்தில் இருந்திருக்கிறார் என்பதை நாங்கள் நிச்சயமாக அறிந்திருக்கவில்லை. அவர் செயலாளராக இருந்து செயற்பட்டமை தான் எங்களுக்கும் தெரிந்திருக்கிறது. ஆனாலும் அண்மையில் அவர் மக்களது வாக்குகளால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பிறகு அம்பாறையில் அவர் பேசுகின்றபோது தானே களத்தில் நின்று பிரபாகரனை சுட்டதைப்போன்று ஒரு கருத்தினை முன்வைத்திருக்கின்றார். சர்வாதிகாரமாக தான் நினைத்ததைச் சொன்னால் மக்கள் ஏற்பார்கள் என்றும். குறிப்பாக பௌத்த மக்கள் மத்தியில் தான் வீரச் செயலைச் செய்துவிட்டேன் அதனால் தான் அந்தப் போரை வென்றோம் என்ற கருத்தில் தன்னை பலப்படுத்துகின்ற ஒரு முயற்சியில் தான் தன்னை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றார்.

அவர் எல்லாள மன்னனை துட்டகாமினி கொன்ற இடத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். அதனது அர்த்தம் அவர் எல்லாள மன்னனை ஒரு தமிழ் மன்னனாக கருத்திற்கொண்டு துட்டகாமினி ஒரு போர் வீரனாக ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக கொன்றான் என்பதன் மூலம் தான் பிரபாகரனைக் கொன்று இவ் ஆட்சியை தக்கவைத்துக் கொண்டுள்ளேன்என்பதுவே.ஆனால் எல்லாளன் - துட்டகாமினியினுடைய அந்தப் போரை எடுத்துக்கொண்டால் துட்டகாமினி எல்லாளனை போரில் கொன்றாலும் எல்லாளனுக்கு சமாதி கட்டி எல்லோரும் அவரை வணங்கவேண்டும் என்று கூறியவன். ஆனால் கோட்டபாய அவர்கள் ஒரு போர் வீரனாக இந்த யுத்த காலத்தில் இருக்கவில்லை. அவரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகத் தான் நியமித்திருந்தார்கள். ஆனால் அவர் மக்கள் மத்தியில் ஒரு ஜனநாயக ரீதியாக வாக்குகளால் வந்த ஒரு மாண்பின் தலைவராக தன்னைக் காட்டிக்கொள்ளாமல் தன்னை ஒரு போர்க்குற்றவாளியாக போர்க்குற்றம் இழைத்தவன் என்று கூட எண்ணாமல் போர்க்களத்தில் தான் நின்று அவரை நாயைப் போல இழுத்துவந்து சுட்டதுபோலச் சொல்வது அவர் பாரிய போர்க்குற்றம் ஒன்றினை இழைத்திருக்கின்றேன் என்பதை அறிவித்திருக்கின்றார்.

ஒரு நாட்டினுடைய ஜனாதிபதி ஒரு ஜனநாயக நாட்டில் நாகரிகமற்ற முறையில் அவர் அந்த உரையினை நிகழ்த்தியிருக்கின்றார். ஜனாதிபதியாக வந்தவுடன் இந்த நாட்டில் ஒரு புதிய அரசியலமைப்பை கொண்டுவர வேண்டும் என்று அறிவித்திருக்கின்றார். அதனை தன்னுடைய பதவியேற்பிலும் பாராளுமன்றில் தனது கொள்கைப் பிரகடனத்திலும் கூறினார். அதன் அர்த்தம் தன்னை இந்த நாட்டில் தெரிவுசெய்த மக்கள் பௌத்த சிங்கள பெரும்பான்மைத்துவ மக்கள் தான். அதனை ஒரு பலம்வாய்ந்த சித்தாந்தமாகக் கருதி இந்த அடிப்படையில் ஒரு அரசியலமைப்பை உருவாக்க முயற்சித்திருக்கிறார் என்பதுதான் தெளிவாகத் தெரிகிறது.

இந்த நாட்டிலே தமிழினம் மிகப்பெரும் பாரம்பரிய வரலாற்றினைக் கொண்டவர்கள். அண்மையில் கூட வைத்தியர் பத்மநாதன் அவர்கள் வரலாற்றுத் துறை புதை பொருள் ஆய்வுகளை நன்கு அறிந்த ஒருவர். அண்மையில் யாழில் உரையாற்றும்போது நாகர்களைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர்களுடைய ஆட்சியதிகாரங்கள். அடையாளங்கள் எல்லாம் இந்த நாட்டில் இருந்தது என்று கூறினார். ஆகவே தமிழர்கள் இந்த நாட்டில் அவர்களுடைய மத. மொழி. கலை. கலாச்சாரங்களை அடிப்படையாகக் கொண்டு பல ஆயிரம் வருடங்களாக வாழ்ந்திருக்கின்றார்கள். சிந்து வெளி நாகரிகத்திலிருந்து தொடர்ச்சியாக இந்த நாட்டிலும் அந்த பாரம்பரியத்திலும் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். வரலாற்றுப் பாடங்களிலும் படித்திருக்கிறோம். இந்தியாவின் தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு வேலைகள் செய்த நிகழ்வுகளில் நான் கலந்துகொண்டவன். இந்த நாடு இந்தியாவுடன் மிக நெருக்கமாக இருந்தது. தாமிரபரணி ஆறு இடையில் இருந்த காலத்தில் பெரிய கடல் இருக்கவில்லை. சுனாமி வந்ததைப்போல பெரிய சீற்றம் உருவாகி கடல் உருவாகியிருக்கிறது. எத்தனையோ நிலப்பரப்புக்கள் குமரிக்கண்டத்தில் இருந்தவை இன்று கடலுக்குள் இருக்கிறது. அப்படிப்பட்ட பின்னணிக்குள் இருக்கின்ற இன மத மொழி அடையாளங்கள் மிக அண்மையில் கீழடி என்ற மதுரைப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் அங்கே நாகரிகமான தமிழர்களுடைய ஆட்சி முறை அவர்களுடைய பாரம்பரிய பழக்கவழக்கங்கள் அவர்களுடைய மொழி கட்டடங்கள் அரண்மனைகளாக இருந்தவைகளை எல்லாம் இப்போது கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாகத் தான் இலங்கையும் இருந்திருக்கிறது என்பது நானும் படித்த அளவில் உண்மை. என்னுடைய முதுமாணிப் பட்டத்திற்காக படித்தபோதும் அங்கிருந்த வரலாற்று ஆசிரியர்களுடன் படித்த வகையிலும் இலங்கை இந்தியாவின் தொடர்ச்சியாக இருந்திருக்கவேண்டும் என்றும் இடையில் இருந்த அந்த ஆறு பொதிகையில் இருந்து திருநெல்வேலி ஊடாக பாலாறு வரைக்கும் வந்ததாக அந்த வரலாறுகள் சொல்கின்றன.

அதேபோல் தான் அந்த கலாச்சாரத் தொடர்புகளும் மத வழிபாடுகளும் இந்தோனேசியாவின் பாலியில் மிகப்பெரிய பிள்ளையார் கோவில் என நீண்டவரலாற்றினைக்கொண்ட தமிழ் மக்களின் பூமியில் இன்று திராவிட சிற்பக்கலையின் அடிப்படையில் கட்டப்பட்ட கோவில்கள் அவற்றினை மாற்றியமைத்து பௌத்த விகாரைகளை அமைக்கின்ற வகையில் வரலாறுகளை நான் பார்த்திருக்கின்றேன் படித்திருக்கின்றேன்.

இயக்கர்களைப் பற்றிய வரலாறு முழுமையாக இல்லாவிட்டாலும் நாகர்களைப் பற்றிய வரலாறுகள் இருக்கிறது. அதன் தொடர்ச்சியாக இந்தப் பிரதேசங்களில் மக்கள் குடியேறியிருக்கலாம். இங்கிருந்து அங்கு சென்றிருக்கலாம். அந்த மக்களுடைய இன மத அடையாளங்கள். கலை கலாச்சாரங்களைக் கொண்ட பிரதேசங்கள் வேலனையில் இன்றும் காணலாம். அப்படிப்பட்ட தமிழ் மக்களுடைய வரலாற்றில் அவர்களுடைய மத இன அடையாளங்கள் கோட்டபாய ராஜபக்ஷவின் ஆட்சி வந்ததன் பின்னர் பௌத்த ஆணைக்குழு ஒன்றினை அமைத்து புதைபொருள் தொல்பொருள் ஆய்வுகளை ஏற்படுத்துவதற்காக இங்கும் பல்கலைக்கழகத்தில் நான் அதற்குப் பொறுப்பாகவுள்ள விக்கிரமநாயக்காவுடன் கதைத்தேன். நீங்கள் உங்களது விருப்பத்திற்கு சிங்கள பௌத்தர்களுடன் இராணுவமே முன்னின்று இந்த தொல்பொருள் ஆய்வுகளில் ஈடுபடுவதானது. பௌத்த மக்கள் இராணுவத்தினரை தலையீடு செய்து. பௌத்த பிக்குகளையும் ஈடுபடுத்தி. குறிப்பிட்ட தொல்பொருள் இடங்களில் தாங்கள் நினைத்தவாறு பௌத்த அடையாளங்கள் தான் கிடைக்கின்றன என்று இவர்கள் எடுத்துவரும் முயற்சியானது கோட்டபாய ராஜபக்ஷவின் ஆணைக்குழுவும் அதில் தமிழ் மக்களுடைய அல்லது நடுநிலை வாய்ந்த ஆய்வாளர்களோ புதைபொருள் ஆராய்ச்சியாளர்களோ இல்லாத நிலையினை நான் குறிப்பிட்டேன். நீங்கள் இப்படிச் செய்வது பாரபட்சமானது தொல்லியல் நடைமுறைகளுக்கு விரோதமானது. தனித்துவமாக இராணுவத்தினரும் பௌத்த பிக்குகளும் ஆய்வுகளைச் செய்வதை நாங்களும் ஒரு காலமும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு நடு நிலையில் பல்கலைக்கழகங்களில் இருக்கின்ற ஆய்வாளர்கள் புதை பொருள் ஆய்வாளர்கள் வைத்தியர் பத்மநாதனைப் போன்ற பலர் இருக்கிறார்கள். நீங்கள் இவர்களையும் இந்தக் குழுவில் இணைத்துக்கொண்டு அரச அதிபருக்குக் கீழோ அல்லது பிரதேச சபைக்குக் கீழோ நாங்கள் இந்த இடங்களை ஆராயவேண்டும். தமிழ் முஸ்லீம் மக்களைச் சார்ந்தவர்களுடன் மதத் தலைவர்களின் இணக்கத்துடன் ஆராயப்போகின்றோம் என அறிவித்துவிட்டு நீங்கள் ஆராயலாம் என்று நான் அந்த அமைச்சரிடம் சொன்னபோது. அப்படி நான் செய்வேன் என்று என்னிடம் சொன்னார். ஆனால் அப்படி நடப்பதாகத் தெரியவில்லை.

இன்று நிர்வாகம் முழுவதும் பொதுமக்கள் நிர்வாகத்தில் இருந்து மனித உரிமைப் பேரவையின் விவாதங்கள். மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை இவற்றில் 28இற்கு மேற்பட்ட போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்ட. சம்பந்தப்பட்டவர்கள் என்று குற்றஞ்சுமத்தப்பட்ட பலர் நாட்டின் 25 மாவட்டங்களிலும் ஆளுநர்கள் போலவும் அரச அதிபர்கள் போலவும் ஆய்வு வேலைகளைக் கூட அவர்கள் பொறுப்பேற்றிருக்கும் நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கில் ஒரு இராணுவ மயமான ஆட்சி இன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதனடிப்படையில் தமிழர்களின் வாழ்விடங்களை அவர்கள் வாழ்ந்த இடங்களை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அடையாளப்படுத்தப்பட்டிருந்த தொல்பொருள் இடங்களை எல்லாம் அவர்கள் மாற்றம் செய்து பௌத்த தேரர்களை வைத்து. இப்பொழுது ஒரு பௌத்த பலம்பெரும் நாடாக மாற்ற முயற்சிக்கிறார்கள். மகாவம்சத்தில் கூட சிங்களவர் என்ற வார்த்தை பாவிக்கப்படவில்லை. அதை அவர்களே ஒப்புக்கொண்டார்கள். ஒரு அகராதியைக் கூட அவர்கள் அண்மையில் தான் முழுமையடையச் செய்தார்கள். அதுவும் இன்னும் முழுமையடையவில்லை. அப்படிப் பட்டவர்கள் ஆட்சியைக் கைப்பற்றி விட்டார்கள். பெரும்பான்மையாக இருக்கிறார்கள் என்பதற்காக. ஆட்சி செய்த இனம். ஆட்சி செய்ய தகுதி வாய்ந்த இனம். சிந்துவெளி நாகரிகத்திலிருந்து ஒரு பாரம்பரிய நாகரிக அடித்தளத்தைக் கொண்ட இனத்தை அழித்துவிடும் நோக்கில் தான் இன்றைய ஆட்சி இடம்பெற்று வருகிறது.

**நேர்காணல் : இரணியன்**

தொடரும்...

# நான் சிங்கள பௌத்த தலைவன், பௌத்த போதனைகளின் படியே நாட்டை நிர்வகிக்கிறேன் – ஜனாதிபதி கோட்டபாய



நான் ஒரு சிங்கள பௌத்த தலைவர். அதை வெளிப்படுத்த நான் ஒருபோதும் தயங்க மாட்டேன். பௌத்த போதனைகளின் படியே நான் இந்த நாட்டை நிர்வகிக்கிறேன் என சுதந்திரதின வைபவத்தில் உரையாற்றிய போது ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவரது உரை வருமாறு,

நமது தாய்நாடு காலனித்துவ வாதிகளிடமிருந்து சுதந்திரம் பெற்று 73 ஆண்டுகள் ஆகின்றன. சுதந்திரத்தை வென்றெடுக்க பல்வேறு தியாகங்களைச் செய்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் மலாயர், பரங்கியர் போன்ற பல்வேறு சமூகங்களையும் சேர்ந்த அனைத்து தலைவர்களுக்கும் இன்றைய தினம் நாங்கள் மரியாதை செலுத்துகிறோம். அதே போன்று, தேசத்தின் சுதந்திரத்திற்காகவும், இறைமைக்காகவும் தங்கள் உயிர்களை தியாகம் செய்த, பல்வேறு அர்ப்பணிப்புகளைச் செய்த படைவீரர்களையும் நான் நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

சுதந்திரம் பெற்ற 73 ஆண்டுகளில், ஒரு தேசமாக நாம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்திருக்கின்றோம். மத மற்றும் இன அடிப்படையிலான மோதல்கள், இனவாத மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள், தேவையற்ற வெளிநாட்டு அழுத்தங்கள் மற்றும் அரசியலமைப்பு நெருக்கடிகள் போன்ற பல பிரச்சினைகளை அவ்வப்போது எதிர்கொண்டோம். தேசியபாதுகாப்பை உறுதிசெய்தல், எமது நாட்டில் வாழும் பல்வேறு இனத்தவர்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், வறுமையை முற்றாக ஒழித்து வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தும் சவால் இன்னும் எமக்கு முன் உள்ளது. எமது நாட்டின் தேசிய மரபுரிமைகள், பாரம்பரிய பழக்கவழக்கங்கள், தேசியம் மற்றும் தேசப்பற்று ஆகியவை கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், பலவீனமுற்றிருந்த தேசிய பாதுகாப்பை மீண்டும் உறுதிப்படுத்தி தாய் நாடு எதிர்கொண்ட சவால்களை வெற்றி கொள்வதற்கான தலைமைத் துவத்தை வழங்க இந்த நாட்டின் 69 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்தனர்.

நான் ஒரு சிங்கள பௌத்த தலைவர். அதை வெளிப்படுத்த நான் ஒருபோதும் தயங்க மாட்டேன். பௌத்த போதனைகளின்படியே நான்இந்தநாட்டைநிர்வகிக்கிறேன். அனைத்து சமயங்களுக்கும் அனைத்து இனங்களுக்கும் உரிய கௌரவத்தை அளிக்கும் அஹிம்சையும் அமைதியும் கொண்ட பௌத்த தத்துவத்தில், எமது நாட்டில் உள்ள அனைத்து மதங்களுக்கும் அனைத்து இனங்களுக்கும் நாட்டில் நடைமுறையில் உள்ள சட்ட கட்டமைப்பிற்குள் சரி சமமாக சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமை உண்டு. தேசியத்தை மதிக்கும், நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் ஒரு தேசிய தலைமைக்கு எதிராக தேசத்துரோக சக்திகள் அணி சேர்ந்து, தங்கள் இலக்குகளை அடைய உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் ஆதரவை நாடுகின்றன. இவர்கள் மிகவும் நுட்பமாக பல்வேறு போலிப் பிரச்சாரங்கள் மூலம் மக்களை தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றனர். இந்த நாட்டு மக்கள் எப்போதும் விவேகத்துடன் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தரவுகளின் அடிப்படையில் விடயங்களை ஆராய்ந்து உண்மைகளை அறிந்து முடிவுகள் எடுக்கப்பட்டால் எவருக்கும் பொது மக்களை தவறாக வழிநடத்த முடியாது. நான் முன்வைத்த “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைத் திட்டத்தை நடை முறைப்படுத்தவே மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு வாய்ப்பளித்துள்ளனர்.

எதிர்கால சந்ததியினருக்காக நாம் வென்ற சுதந்திரத்தை எப்போதும் பாதுகாப்பதற்கும், எமது நாட்டின் ஒருமைப்பாடு, ஆள்புல எல்லை மற்றும் இறைமையைப் பாதுகாப்பதற்கும் அரச தலைவர் என்ற முறையில் நான் உறுதியளித்திருக்கிறேன். அந்த உறுதி மொழியை நான் எப்போதும் பாதுகாப்பேன். இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இந்த நாட்டில் வாழும் அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமை உண்டு. இன அல்லது மத அடிப்படையில் குடிமக்களைப் பிரிப்பதற்கான முயற்சிகளை நாங்கள் நிராகரிக்கிறோம். அனைத்து குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாக்கப் படுவதுடன், ஒரே சட்டம் என்ற கொள்கையே எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுவே எப்போதும் எமது நிலைப்பாடு. நாங்கள் எப்போதும் சட்டத்தின் ஆட்சியை மதிக்கிறோம். கடந்த காலத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் நீதித்துறை மீது அரசியல்வாதிகள் மேற் கொண்டிருந்த அழுத்தத்தை மக்கள் நிராகரித்தனர். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளிடமிருந்து நியாயமான, பக்கச்சார்பற்ற மற்றும் திறமையான சேவையை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதன்படி, மக்களின் முக்கிய கவனத்தை ஈர்த்த உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் மற்றும் மத்திய வங்கி மோசடி போன்ற குற்றங்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு நான் அறிவுறுத்தியுள்ளேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை தற்போது எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதன் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். மேலும் கடந்த பாராளுமன்றத்தினால் இது பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு குறித்த கண்காணிப்பு செயற்குழுவின் பரிந்துரைகளும் கவனத்திற் கொள்ளப்பட்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும்எதிராகநடவடிக்கை எடுக்கப்படும். இந்த கொடூரமான குற்றத்தைத் திட்டமிட்ட உதவி ஒத்தாசைகள் வழங்கிய பொறுப்பானவர்கள் எவரும் சட்டத்திற்கு முகங்கொடுக்காமல் தப்பிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அதேபோன்று இந்த நாட்டில் தீவிரவாதம் மீண்டும் தலைதூக்கவும் நாம் இடமளிக்க மாட்டோம்.

கொவிட் தொற்றுநோயால் முழு உலகமும் நெருக்கடியில் இருக்கும் இந்த நேரத்தில், எமது நாடும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு வருடத்திற்கும் மேலாக இந்த தொற்றுநோய் நாட்டின் பொருளாதார அபிவிருத்திசெயன்முறைக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் ஒரு தடையாக இருந்து வருகிறது. தற்போது, உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் கொவிட் வைரஸிற்கான தடுப்பூசிகளை வெற்றிகரமாக பரீட்சித்துள்ளன. இந்த தடுப்பூசிகளை விரைவாகப் பெறுவதற்கு இலங்கைக்கு உதவுமாறு இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தலைவர்களிடம் நான் கேட்டுக்கொண்டேன். இந்த விடயம் தொடர்பில் உலக சுகாதார அமைப்புடனும் அரசாங்கம் கலந்துரையாடியது. அதன்படி, ஒரு தடுப்பூசி ஏற்கனவே இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு எமது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போதைய உலகளாவிய நெருக்கடியை எதிர்கொண்டு அனைத்து நாடுகளும் கற்றுக்கொண்ட ஒரு முக்கியமான பாடம் வலுவான தேசிய உற்பத்தியாளர்களின் தேவையாகும். உணவுப் பாதுகாப்பு மற்றும் தன்னிறைவு ஆகியவற்றை உறுதி செய்வதற்காக சுதேச விவசாயத்துறையை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற எங்கள் கொள்கையானது சரியானதும் காலத்திற்கு ஏற்றதுமாகும் என்பதை இது மேலும் உறுதிப்படுத்துகிறது. இலவச உர விநியோகம், நெல்லுக்கான உத்தரவாத விலையை ரூ.50 வரை உயர்த்தியமை,விவசாயகடன்களை தள்ளுபடி செய்தல், நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான குளங்களை புனரமைத்தல், வீட்டுத் தோட்டம் மற்றும் நகர்ப்புற விவசாய மேம்பாடு மற்றும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல் போன்ற ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மூலம் நாட்டில் விவசாய மறுமலர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்போம். நெல், சோளம், தானிய வகைகள், உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் இறக்குமதி வரியை முகாமைத்துவம் செய்து, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட முடியுமான மஞ்சள் போன்ற பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், மிளகு போன்ற பயிர்களின் மீள் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் விவசாயிகளை வலுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் மூலம் வெற்றிகரமான பெறுபேறுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன. உள்நாட்டு உற்பத்தி அதிகரித்து ஏற்றுமதி வாய்ப்புகள் விரிவடைந்துள்ளன.

உள்ளூர் விவசாயிகளை பொருளாதார ரீதியாக வலுப்படுத்த விவசாயிகளைதொழில்முயற்சியாளர்களாக மாற்றவேண்டும் என்று நான் எப்போதும் கூறியுள்ளேன், நாட்டிற்கு பெரும் அந்நிய செலாவணியைக் கொண்டுவரும் ஒரு துறையாக விவசாயத்தை மேலும் மேம்படுத்துவதே எங்கள் நோக்கம். பொருளாதார வளர்ச்சியில் தொழில்துறை மற்றும் சேவைத் துறைகளின் முக்கியத்துவத்தை நாம் மறக்கவில்லை. சமீப காலங்களில், இந்தத் துறைகளுக்கு வரிச் சலுகைகளை வழங்குவதன் மூலமும், வட்டி விகிதங்களைக் குறைப்பதன் மூலமும் தொழில்துறை மற்றும் சேவைத் துறைகளை ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. பத்திக், பிரம்பு, களிமண் மற்றும் ஆபரணங்கள் போன்ற பாரம்பரியத் தொழில்களை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்ட இராஜாங்க அமைச்சுக்கள் மூலம் ஏற்கனவே பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எமது நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கு மிகவும் குறைந்த ஒற்றை இலக்க வட்டி விகித கடன் வசதிகளை வழங்குவதிலும், தேவையான ஒப்புதல்களைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்களைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதற்கும் அவர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்பதற்கும் நாங்கள் கவனம் செலுத்தினோம்.

12ஆம் பக்கம் பார்க்க...

# தமிழர்களின் தொடர் அகிம்சை வழிப் போராட்டங்களே நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தரும்

இலங்கை வாழ் சிறுபான்மை இனமான தமிழர்கள் தங்கள் தன்னாட்சி உரிமைக்கான போராட்டங்களை கடந்த 70 ஆண்டு காலமாக அகிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் மேற்கொண்டு வந்த நிலையில் 1965 களில் இருந்து தமது அகிம்சை ரீதியான போராட்டங்களை தமிழ் தலைமைகள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தனர். குறிப்பாக 1974 ஆம் ஆண்டு தமிழராட்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொழுது அம் மாநாட்டுக்கு இந்தியா தமிழ் உணர்வாளர்கள் மற்றும் உலகில் உள்ள தமிழ் ஆர்வலர்கள் எனப்பலரும் கலந்து கொண்ட நிலையில் அம் மாநாட்டில் 2ஆம் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த நிலை யில் இலங்கை காவல்துறையினரும் அம்மாநாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர் அதில் பலர் குண்டுபட்டு கொல்லப்பட்டனர். அந்த நிகழ்வுக்கு பின்னர் தமிழ் இளைஞர்கள் ஆயுத வழிமுறைக்கு தமது பாதையை மாற்றினர். ஆயுதப் போராட்டங்கள் வடகிழக்கு பகுதிகளில் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலகட்டங்களில் எல்லாம் அகிம்சைவழி போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இதில் 1983 ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்று யூலை கலவரத்தினை அப்போதைய ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கமும் அதன் தலைவரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுமான ஜே.ஆர் ஜெயவர்த்தன அவர்கள் கண்டு காணாமலும் இருந்த நிலையில் அக் கலவரமானது மிக விஸ்வரூபமெடுத்து கொழும்பு உட்பட புறநகர் பகுதிகள் எங்கும் அப்பாவி தமிழ் மக்களை கொன்று குவித்த நிலையில் யாழ்ப்பாணப் பகுதியெங்கும் இக்கொலைகளை நிறுத்துமாறு பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்ற நிலையில் இந்தியா அரசின் அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் உடனடியாக தமது தூதுவர் பார்த்த சாரதியை கொழும்புக்கு அனுப்பி ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கு இந்தியாவின் கடும் ஆட்சேபனையை தெரிவித்ததுடன் இக் கலவரத்தை நிறுத்தாவிடின் தனது இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப வேண்டிவரும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. உடனடியாக ஜே.ஆர் அவர்கள் கலவரத்தை அடக்கி ஊரடங்கு உத்தரவை பிறப்பித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊர்வலங்கள் சாத்தியாக்கிரக போராட்டங்கள் போல் தமிழ் நாட்டிலும் மிகவேகமாக இடம்பெற்றது. இதனால் இலங்கை அரசு அடிபணிந்து கலவரத்தை அடக்கியது. அடுத்து 1987 ஆம் ஆண்டு இந்தியா அமைதிப்படை என்று வந்த இந்தியா இராணுவம் தமிழர்களுக்கு எதிராக பல கொலை வெறி தாக்குதல்களை நடத்தியது. பல பாலி யல் வல்லுறவுகளை மேற்கொண்டது. உலக அரங்கில் இவ்விடயம் வெளியில் வராதபடி செய்தி தணிக்கைகளை அமுல்படுத்தி வடகிழக்கு பகுதியெங்கும் நர வேட்டையாடியது. ஆனாலும் அங்கும் அகிம்சை ரீதி யான போராட்டங்கள் சத்தியாகிரகப் போராட்டங்கள் இவ் கொலை வெறி தாக்குதல்களை உலகத்துக்கும் குறிப்பாக இந்தியா தமிழ் நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்தி இந்தியா இராணுவத்தின் கொடூரத்தன்மையை துகிலுரித்து காட்டியது. தமிழகம் தொடங்கி உலகமெங்கும் இந்தியப் படைகளின் கொடூரத்தன்மையை அறிந்துகொள்ள இவ் அகிம்சை ரீதியான போராட்டங்கள் மக்கள் பயப்படுத்தப்பட்ட எழுச்சி மிகு போராட்டங்கள் உறுதுணையாக இருந்தன. இதனால் இந்தியா இராணுவம் மிகுந்த அவமானத்துடன் ஈழ மண்ணைவிட்டு வெளியேறியது. 1990 களின் பின்னர் இரண்டாம் ஈழப்போர் காலகட்டங்களில் வடகிழக்கு பகுதிகளில் மிக மோசமான பொருளாதாரத் தடையினை சிங்கள அரசு தமிழ் மக்கள் மீது திணித்தது. இக் காலகட்டங்களில் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மிக எழுச்சியுடன் இருந்தகாலம் இராணுவ சமநிலையை நோக்கி நகர்த்த காலம் இப் பொருளா தாரத் தடையால் வட பகுதி தமிழ் மக்கள் மிகவும் சொல்லொன்னா துயரை அடைந்தனர். அது மட்டுமன்றி மிகப் பாரியளவிலான விமானக் குண்டுவீச்சுகளும் ஆட்லறி தாக்குதலும் அப்பாவி தமிழ் மக்களை தினம் தினம் கொன்று குவித்தது. இவ் விடயங்களை உலகிற்கு அறிய முடியாதவாறு மிக இறுக்கமான செய்தி தணிக்கைகளை அரசு விதித்திருந்த நிலையில் அக்காலப் பகுதிகளில் இடம்பெற்ற ஊர்வலங்கள் பல்கலைக்கழக மாணவர்களின் தொடர் போராட்டங்கள் பகிஸ்கரிப்புகள் பாடசாலை பகிஸ்கரிப்புக்கள் அரச நிறுவனங்கள் முடக்கம் என பல வழிகளிலும் அரசின் கொடூரத் தன்மையான நிலையை உலகுக்கும் இந்தியாவுக்கும் எடுத்தி யம்பியது இவ் அகிம்சை போராட்டங்கள் உலக மனித உரிமை நிறுவனங்கள். உலக அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்து வடபகுதியில் இடம்பெறும் பொருளா தார தடைகள் மற்றும் விமானக் குண்டு வீச்சுகளால் அப்பாவி தமிழ் மக்கள் மாணவர்கள் கொல்லப்படுவதை உலக அரங்கிற்கு கொண்டு சென்றன. இப் போராட்டங்கள் அரசுக்கு அப்போது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியதுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு செல்வதற்கு இதுவும் ஓர் காரணமாக அமைத்தது வடகிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற பட கொலைகள் குறிப்பாக செம்மணி படு கொலை கொக்கட்டிசோலை படுகொலை நாகர்கோவில் பாடசாலை படுகொலை நவாலி சென்பீற்றர் தேவாலய விமானக்குண்டுவீச்சால் ஏற்பட்ட படு கொலைகள் அடங்கலாக அக்கால கட்டங்களில் இடம்பெற்ற படுகொலை கள் அனைத்து உலக நாடுகளுக்கு தெட்ட தெளிவாக பறைசாற்றி இலங்கை அரசின் கோர முகத்தை உலகுக்கு வெளிப்படுத்தியது.

இப் போராட்டங்களே 2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கு இடையில் நோர்வேயின் அனுசரணையுடன் இடம் பெற்ற போர் நிறுத்தமும் அதனையொட்டிய பேச்சு வார்த்தைகளும் இடம்பெற்ற காலத்தில் வடகிழக்கு பகுதியெங்கும் தமிழ் மக்கள் தாமாக முன்வந்து செயல்படுத்திய பொங்கு தமிழ் நிகழ்வுகள் அக்காலகட்டங்களில் தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்கான அவர்களின் அப்பற்ற எழுச்சியை கட்டியம் கூறி நின்றது. அத்துடன் அந்தபொங்கு தமிழ் நிகழ்வுகள் புலம்பெயர் நாடுக ளிலும் மிகச் சிறப்பாக செயல்பட்டது. இங்கு குறிப்பிடத்தக்கது.

2009 ஆம் ஆண்டு உலகவல்லரசுகளின் உதவியுடன் முள்ளிவாய்க்கால் மண்ணில் ஆயுதப் போராட்டமும் அதனுடன் பல இலட்சக்கணக்கான அப்பாவி பொது மக்களும் கொல்லப்பட்டும் பல்லாயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் பலயுத்த குற்றங்கள் அங்கு இடம்பெற்றன. வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த விடுதலைப் புலிகளின் உயர்மட்ட தலைவர்கள் உட்பட பல பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட வீடியோ ஆதாரங்கள் அனைத்தும் வெளியாகியது. ஐநாவின் மனித உரிமை கூட்டத் தொடர்களில் அப்போர்க் குற்றம் தொடர்பான விசார





ணைகளை முன்னெடுக்குமாறும் இதனுடன் சம்மந்தப்பட்ட அரச படைத்தலைமைகளுக்கும் இதனை முன்னெடுத்த ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளர் ஆகியோருக்கு எதிராக விசாரணையை மேற்கொள்ள வேண்டும். என்று வடகிழக்கு தமிழர்களும் புலம் பெயர் தமிழர்களும் தமிழக உணர்வாளர்களும் அகிம்சை வழியான போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர். 2009ஆம் ஆண்டு தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை கோரமாக அடக்கியதிற்கு பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டபாய ராஜபக்ச அவர்கள் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்று ஜனாதிபதியாக உள்ளார். 2009 ஆண்டு யுத்தம் முடிவுக்கு தலைமை தாங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் 2020 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராக உள்ள நிலையில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் வெற்றி பெற்றதன் பின்னர் சிறுபான்மை இனங்கள் மீதான தனது பௌத்த மேலாதிக்கத்தை திணிக்கும் செயல்பாட்டில் ஈடுபடத் தொடங்கியுள்ளமை அவதானிக்க முடிகின்றது.

தமிழர்களின் பூர்வீக மதசார் இடங்களில் தொல்லியல் செயல்பாடென கூறி அவற்றை அபகரிக்கும் செயல்பாட்டிலும் தமிழர்களின் பூர்விக நிலங்களில் பௌத்த விகாரைகள் அமைப்பதிலும் இராணுவம் மற்றும் புலனாய்வாளர்களை கொண்டு அச்சுறுத்தும் செயல்பாடுகள் இன்னுமொரு சிறுபான்மை இனமான முஸ்லிம் இன மீதான அடக்குமுறைகள் அவர்களின் சமய ரீதியான ஜனசா அடக்கத்தை கொரோனா வைரசை காட்டி உலகமெங்கும் செயல்படும் ஜனசா அடக்க நிலையுமீறி அவற்றை தகனம் செய்தல் என்றும் தான் தோன்றித்தனமான செயல்பாட்டை செயல்படுத்தி வருதல் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற வாய்ச் சொல்லில் மட்டும் கூறிக்கொண்டு சிங்கள பௌத்த மக்களுக்கு ஓர் சட்டமும் சிறுபான்மை தமிழர்கள் முஸ்லிம் இனங்கள் மீது இன்னொரு சட்டத்தையும் நடைமுறைப்படுத்தி வருகின்றமையும் தமிழர்களின் இறந்தவர்களை கூட நினைவு கூர்வதை தடை செய்துள்ளமை போன்ற இன அடக்குமுறைகளும் சிறுபான்மை இனங்களுக்கு இந்த நாடு சொந்தமில்லை என்பதை போலவும் செயல்பட்டு வருகின்றமை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெற உள்ள மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை தொடர்பான பிரேரணை வர உள்ள நிலையில் அதனை எதிர்கொள்ள அரசானது சீனா இந்தியா அமெரிக்கா ரஷ்யா போன்ற நாடுகளின் உதவியை எதிர்பார்த்துள்ளது. இதில் சீனா இலங்கைக்கு ஆதரவாக எப்பொழுதும் இருக்கும் அத்துடன் அந்நாடு இப்பொழுது பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் மிகவும் வல்லமை கொண்ட நாடாக காணப்படுகின்றது. அத்துடன் இந்தியாவும் இலங்கைக்கு உதவ முன்வரும் ஏனெனில் இந்தியா உதவி செய்யாமல் விட்டால் அது சீனாவுக்கு சாதகமாக அமைவதுடன் சீனா இலங்கை உறவு மேலும் வலுப்படும் ஆகவே இந்தியா விரும்பியோ விரும்பாமலோ இலங்கைக்கு ஐ.நா மனித உரிமை மாநாட்டில் உதவி செய்யும் இவ்வாறான நிலை தமிழர்களின் காய் நகர்த்தல் எவ்வாறு இருக்கப்போகின்றது. தற்பொழுது பிரிந்து நின்ற அகிம்சை வழி தமிழ் அரசியல் தலைமைகளும் ஓர் காலத்தில் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்ட போராட்ட அமைப்புகளும் தற்பொழுது ஓரணியில் இணைந்த ஐநா மனித உரிமையகத்துக்கு அறிக்கை ஒன்றை தயார் செய்து அனுப்ப உள்ள நிலையில் இலங்கையின் 73 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை கரிநாளாக கொண்டாட வேண்டும் என காணாமல் போனோர் சங்கங்கள் அறிவித்து தொடர் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டங்களை ஒரு பக்கம் முன்னெடுத்து வரும் நிலையில் மறுபக்கம் அரசியல் கட்சிகள் சமய தலைவர்கள் பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள் வெகுசன அமைப்புகள் முஸ்லிம் தலை மைகள் சமூக ஆர்வலர்கள் என அனை வரும் ஒன்றிணைந்து பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை என்னும் தொடர் அகிம்சைவழி ஊர்வலங்களை மேற்கொண்டு வருகின்றனர். இப்பந்தி எழுதும் வரை திருகோணமலை நோக்கி அவர்களது தொடர் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. 04.02.2021 அன்று ஆரம்பமான இப் போராட்டத்துக்கு மக்கள் எழுச்சியுடன் ஆதரவளித்து வருகின்றமை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

12ஆம் பக்கம் பார்க்க...

**தாயகத்தான்**

# நெருங்கும் ஐ.நா கூட்டத்தொடர்! சூடு பிடிக்கும் இலங்கை விவகாரம், சிங்கள மக்களை மயக்கத் தயாராகும் அரசு

**கடந்தவார தொடர்ச்சி...**

சிங்கள பௌத்த மயமாக்கம் என்பது மதப் பல்வகைமைக்கு எதிரானது. மதப்பல்வகைமை சரி, மத வேலாண்மை சரி, மதப் பல்வகைமை தான் ஜனநாயகத்திற்கு அடிக்கட்டம், மதப் பல்வகைமை தான் நல்லிணக்கத்திற்கும் முக்கியம் பெறும் நிபந்தனை. ஆனால் இலங்கைத்தீவு ஒரு பெரிய மதத்திற்கும் ஒரு பெரிய இனத்திற்கும் ஏற்பாடுகளை கொண்டிருக்கும். அதையொரு கொள்கையாககொண்ட அரசின் உபகரணங்கள் அதை முன்னெடுக்கின்றன. அப்படிப்பட்ட தொல்லியல் திணைக்களம் என்பது சிங்கள பௌத்த மயமாக்கலின் பிரதான உபகரணங்களில் ஒன்று. அதனை சிங்கள அறிஞர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக பேராசிரியர் ஜெகத் வீரசிங்க சில ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய ஒரு உரையில் இனவாத அகழ்வாதார தொல்லியல்துறை என்று சொல்லியிருந்தார். பசில் பெர்னான்டோ நீண்டதொரு கட்டுரையில் இலங்கைத்தீவில் தொல்லியல் துறை இலங்கைத்தீவின் இனவாத விசம் என்று வர்ணித்திருந்தார். நிராவிக்ரமசிங்கவும் அது பற்றி எழுதியிருக்கிறார்.

குறிப்பாக யுனெஸ்கோ நிதித்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கலாச்சார முக்கோணத்திட்டம் எனப்படுவதை எல்லா பண்பாடுகளையும் புரோமட்பன்னி நோக்கினார். ஆனாலும் பெரியதொரு இனத்தின் பண்பாட்டினதும் மரவுரிமை சின்னத்தினதும் மேலையொத்து முடிந்தது. அதாவது யுனெஸ்கோவின் நிதியுதவி திட்டம் ஒன்று சிங்கள பௌத்த இனபேரினவாதத்தின் கருவியாகி ஒரு திணைக்களத்தால் ஓர் இனத்திற்கு சார்பாக பயன்படுத்தப் பட்டிருந்தது. இது யுனெஸ்கோவிற்கே பிறகு தான் தெரியவந்தது. இதை சுட்டிக்காட்டியது நிராவிக்ரமசிங்க என்ற ஒரு சிங்கள புலமையாளர். பிரச்சினை என்னவென்றால் சிங்களப் புலமையாளர்களே அதனை சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். தொல்லியல் துறை எனப்படுவது ஒரு மதத்தை ஒரு இனத்தை புரோமட் பன்னும் நோக்கிலானது. இதுதான் தற்பொழுது நடக்கிறது.

2009க்கு பின்னுக்கு அரச படையின் கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதிகளுக்குள் அவர்களின் பக்கத் துணையோடு அவர்களின் பாதுகாப்பு கவசத்துடன் தொல்லியல் திணைக்களம் உட்பட அனைத்து திணைக்களத்திலும் அதை செய்கிறது. தொல்லியல் திணைக்களம் மட்டும் செய்யவில்லை. வனவளப்பிரிவு, வனவள ஜீவராசிகள் திணைக்களம், நீரியல் கடற்றொழில் திணைக்களம், உல்லாசப் பயணவியல் திணைக்களம் இவ்வாறான அனைத்து திணைக்களங்களும் அதனைத் தான் செய்கிறது.

எங்களின் உள்ளூரில் காணப்படுகின்ற டீ.எஸ் அலுகலகங்கள் கூட அதைத்தான் மறைமுகமாக செய்கிறது. இதிலிருப்பவர்கள் தமிழ் அதிகாரிகள் என்பதனால் எங்களுக்கு வெளியில் தெரியவில்லை. ஆனால் அவர்களும் விரும்பியோ விரும்பாமலோ அதன் மறைமுகக் கருவிகள் தான். அவர்கள் அதனை வேனும் என்று செய்யவில்லை. ஜீவனோபாயமாக அதனை செய்கின்றார்கள். அவர்களுக்கு தெரியாது நாங்கள் ஒரு ஒடுக்கும் அரச இயந்திரத்தின் உபகரணங்கள் என்று.

ஆகவே பிரச்சினையை நாங்கள் அப்படித்தான்பார்க்க முடியும்.நீதிமன்றம் நீதிபரிமான கட்டமைப்பு பொலிஸ் போன்றனவும் அதே தான். ஒரு ஒடுக்கும் அரசு ஒடுக்கும் சட்டங்களை இயற்றும். அந்த சட்டங்களை தன் நீதி பரிமாண கட்டமைப்பிற்கூடாக நிறைவேற்றும். ஒரு ஒடுக்கும் அரசின் ஒடுக்கும் சட்டங்கள் தான் இங்கு பிரச்சினை. அந்த ஒடுக்கும் சட்டங்களை இயற்றிய ஒடுக்கும் அரசின் ஒடுக்கும் கொள்கை தான் பிரச்சினை.




எனவே இவையனைத்தும் உபகரணங்கள். ஆனால் 2009க்கு பின்னர் அது தற்பொழுது மறைமுக யுத்தமாக மாறியிருக்கிறது. எவ்வாறென்று சொன்னால் 2009க்கு முன்னர் அந்த யுத்தம் வெளிப்படையான தொரு பௌதீக யுத்தமாக இருந்தது. அந்த பௌதீக யுத்தத்தை படைத்தரப்பு முன்னெடுத்தது. அது யுத்தத்தில் வென்றது. அது யுத்தத்தில் வென்ற பின்னர் தற்பொழுது அதே ஒடுக்கும் கொள்கை திட்டமில்லா வழி முறைகளில் முன்னெடுக் கப்படுகிறது. யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல். ரணில் என்பது இரத்தம் சிந்தாத யுத்தம். அதைத்தான் இன்று திணைக்களகங்கள் செய்கின்றன. தொல்லியல் திணைக்களம் அதைத்தான் செய்கிறது. தொல்லியல் திணைக்களம் ஏற்கனவே இதை கிழக்கில் தொடங்கிவிட்டது. ஒரு நீண்ட திட்டத்தின் ஒரு பகுதி வடக்கிற்கானபகுதிதான்குருந்தூர் மலை. அவர்கள் ஏற்கனவே அம்பாறையிலே பெருமளவிற்கு இனவிகிதாசாரத்தைதங்களுக்கு சார்பாக மாற்றிவிட்டார்கள். மட்டக்களப்பில் அந்த வேலைகளை தொடங்கியிருக்கிறார்கள்.

மட்டக்களப்பில் தொல்லியல் தேவைகளை உருவாக்கினார்கள். தமிழாலோ முஸ்லீமாலோ இல்லை. ஆகவே தமிழ் மருத்துவர் வரத் தயார் என முஸ்லீம் மருத்துவர் கூட்டிக்கொண்டு சென்றார் அவர் ஏற்கவில்லை. இதேவிடயத்தில் ஒரு தமிழ் அமைச்சரும் அணுகினார். அவராலும் இவருக்கு உதவ முடியவில்லை. பிரச்சினை என்னவென்றால் தொல்லியல் செயலணி என்பது முழுக்க முழுக்க சிங்கள மக்களின் நோக்கத்தை உள்நோக்கமாக கொண்டு உருவாக்கப்பட்டது.

கிழக்கு தொல்லியல் செயலணிக்குள் ஒரு செய்தி வருகிறது. அவர்கள் கிழக்கை முழுமையாக வடக்கிலிருந்து பிரிக்கும் வேலையை தொடங்கிவிட்டார்கள் என்று. அம்பாறை போய்விட்டது. திருகோணமலை போய்விட்டது. மட்டக்களப்பு தான் ஓரளவு தமிழ் செறிவு மிக்கதாக இருக்கின்றது. மட்டக்களப்பையும் எடுத்து விட்டால் பின்னர் எதுவுமில்லை. மட்டக்களப்பு தொல்லியல் செயலணி, மயிலந்தமடு மேய்ச்சல் தரை விவகாரம் அனைத்துமே அந்த நோக்கிலானது.

மேய்ச்சல் தரை விவகாரம் என்பது வெறும் கால்நடை விவகாரம் அல்ல. அது மாட்டுக்கு புல் இடும் விடயமல்ல. அதற்கும் மேல் மாட்டுக்கு புல் இல்லாவிட்டால் கால்நடை இல்லை, கால்நடை இன்றி விவசாயம் இல்லை, விவசாயம் என்பது கால்நடையையும் சேர்த்து தான். கால்நடையற்ற விவசாயி அரைவாசி. கால்நடை இல்லாவிட்டால் விவசாயி ஒரு பயிர் செய்யாவிட்டால் வாழவே முடியாது. கால்நடைக்கு மேய்ச்சல் தரை இல்லையென்றால் விவசாயமும் அதன் தர்க்கபூர்வ விளைவாக நலிவடைகிறது. இவ்வாறு நலிவடைந்தால் மட்டக்களப்பு விவசாயி தொழிலை விடுவார். தொழிலை விட்டுவிட்டு அவர் மிடிலிஸ்ட்டுக்கு போவார். மட்டக்களப்பில் ஏற்கனவே அது தொடங்கிவிட்டது. மூன்று குடும்பங்களில் இரண்டு குடும்பங்களை சேர்ந்தவர்கள் மேற்கு ஆசியாவில் வேலை செய்கிறார்கள். இதில் குடும்பத்தலைவரும் வரும் குடும்பத்தலைவியும் வரும். இவ்வாறு குடும்ப தலைவரும் தலைவியும் வெளிக்கிட்டால் குடும்பம் சிதையும். பிள்ளைகள் சிதையும். காசு வரும் ஆனால் குடும்பம் குடும்பமாக இருக்காது. பொருளாதாரம் சிதையும்.

ஆகவே பிரச்சினை என்னவென்றால் அவ்வாறான வேரற்ற சீவனோபாயத்திற்கு அவர்கள் தள்ளப்படுகிறார்கள். கிழக்கில் அதை வடிவாக செய்கிறார்கள். அடுத்த கட்டம் வவுனியாவும் ஏற்கனவே மூவின இனத்தை சேர்ந்த மாவட்டமாக மாறிக்கொண்டு இருக்கிறது. முல்லைத்தீவு இலங்கைத்தீவின் மாவட்டத்திலே சனச்செறிவு குறைந்த மாவட்டம். இதில் கற்றுக்கொண்ட பாடங்களுக்கான ஆணைக்குழு மகிந்த உருவாக்கினார். அதன் அறிக்கையின் அடிப்படையில் முல்லைத்தீவில் 81 வீதமான நிலம் அரச கட்டுப்பாடு. 19 வீதம் மக்கள் சேவைக்கு பயன்படுத்தப்படும். வதிவிட நிலமும் விவசாயம் மற்றும் ஏனைய சேவைகளுக்கு மக்கள் பயன்படுத்தும் நிலமும். அதை விட கணிசமாக தொல்லியல் திணைக்களங்களாலும் படைத்தரப்புக்களாலும் அபகரிக்கப்பட்ட நிலங்களும் உண்டு. இலங்கைத்தீவிலே தமிழ் மக்களின் கையில் தமிழ் மக்களிடம் மிகக் குறைந்தளவிலான நிலம் கையில் இருக்கும் மாவட்டம் முல்லைத்தீவு.

**இரணியன்**




## ஹிட்டான செம்பருத்தி சீரியலில் மீண்டும் நடிக்க வந்த பிரபலம்

பிரபல தொலைக்காட்சியான ஜீ தமிழில் மிகவும் ஹிட்டான சீரியல் செம்பருத்தி.

இந்த சீரியலில் நாயகன்-நாயகியாக நடித்த கார்த்திக்-ஷபானா ஆகியோரின் ஜோடிக்கு ஏகப்பட்ட ரசிகர்கள் உள்ளார்கள்.

ஆனால் திடீரென அந்த சீரியலின் கதாநாயகன் கார்த்திக் மாற்றப்பட்டார். இதனால் சில ரசிகர்களுக்கு வருத்தம் தான்.

தற்போது சீரியலில் நீண்ட நாட்களாக காணாமல் போன உமா என்ற கதாபாத்திரம் மீண்டும் இடம்பெறவுள்ளது.

தகவல் தெரிந்த ரசிகர்கள் உமா கதாபாத்திரம் இனி உள்ளதா அப்போது கண்டிப்பாக காமெடியாக சீரியல் இருக்கும் என கமெண்ட் செய்து வருகின்றனர்.



## இந்தியளவில் சாதனை படைத்த நடிகை கீர்த்தி சுரேஷ்

தமிழ், மலையாளம் மற்றும் தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளில் இளம் முன்னணி கதாநாயகியாக விளங்கி வருபவர் நடிகை கீர்த்தி சுரேஷ்.

தென்னிந்திய சினிமா வட்டாரத்தில் மிகவும் குறுகிய காலகட்டத்தில் முன்னணி நட்சத்திரங்களில் ஒருவராகவும் தேசிய விருதை வென்ற நடிகையாகவும் மாறியவர் இவர்.

ஒவ்வொரு வருடத்தின் துவக்கத்தில் பிரபல Forbes நிறுவனம் வெளியிடும். அந்த வகையில் இந்த ஆண்டில் இந்தியளவில் மிகவும் பிரபலமான 30 வயதுக்குள் இருக்கும் பிரபலங்களின் லிஸ்ட் வெளியாகியுள்ளது.

இதில் தென்னிந்திய கதாநாயகிகளில் நடிகை கீர்த்தி சுரேஷ் மட்டுமே இடம்பிடித்து சாதனை படைத்துள்ளார்.

இந்த தரவரிசை பட்டியல் தற்போது இணையத்தில் மிகவும் வைரலாகி வருகிறது.




## விஜய் சேதுபதியை தொடர்ந்து கொடூரமான வில்லனாக நடிக்கும் ஆர்யா

தளபதி விஜய் மற்றும் விஜய் சேதுபதி நடிப்பில் கடந்த மாதம் வெளியான திரைப்படம் தான் மாஸ்டர். இப்படத்தில் கொடூரமான வில்லனாக நடித்து ரசிகர்கள் மனதில் இடம் பிடித்தவிட்டார் விஜய் சேதுபதி.

அதனை தொடர்ந்து விஷால் மற்றும் ஆர்யா நடிப்பில் இயக்குனர் ஆனந்த் ஷங்கர் இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் ENEMY.

இப்படத்தின் விஷால் ஹீரோவாக நடிக்கும் நிலையில் நடிகர் ஆர்யா வில்லனாக நடித்து வருகிறார். மேலும் தற்போது அவரின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது.




## சிவா கார்த்திகேயனின் அடுத்த படத்தில் இணைந்த தளபதி விஜய் பட வில்லன்

சிவா கார்த்திகேயன் நடிப்பில் இயக்குனர் நெல்சன் இயக்கத்தில் வரும் மார்ச் மாதம் வெளியாகவுள்ள திரைப்படம் தான் டாக்டர்.

இப்படத்தை தொடர்ந்து சிவகார்த்திகேயன் சிபி சக்ரவர்த்தி இயக்கத்தில் டான் என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தின் அறிவிப்பு வீடியோவுடன் வெளியாகி ட்ரெண்டானது.

இந்நிலையில் டான் படத்தில் தற்போது நடிகர் எஸ்.ஜெ.சூர்யா இணைந்துள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்படத்தில் அவருக்கு ஜோடியாக நடிகை பிரியங்கா மோகன் நடிக்கவுள்ளார். டாக்டர் படத்திலும் இவர் தான் கதாநாயகியாக நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டமின்றி மற்றும் ஒரு முக்கியமான கதாபாத்திரத்தில் நடிகர் சமுத்திரக்கனி நடிக்கவிருக்கிறார் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.






# கை, கால் பராமரிப்பு

**கருப்பு நிறம் மாற :–** கை, கால் முட்டிகளில் கருப்பு நிறம் அதிகமாக இருந்தால், தொடர்ந்து அந்த இடத்தில் எலுமிச்சப்பழ சாற்றை தேய்த்து சோப்பு போட்டு குளிக்க வேண்டும் நாளடைவில் கறுப்பு நிறம் போய் விடும்.

**வறண்ட தோல் மற்றும் சுருக்கம் நீங்கி தோல் மிருதுவாக** :- தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஒலிவ் ஒயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.

ஆலிவ் எண்ணெயுடன் சர்க்கரை கலந்து உள்ளங்கைகளில் தேய்த்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்ய உள்ளங்கைகளின் கடினத் தன்மை மறைந்து மிருதுவாக மாறும்.

தண்ணீரை மிதமாக சூடுபடுத்தி, சிறிது உப்பு கலந்து, அதில் விரல்களை சிறிது நேரம் வைத்திருந்தால், விரல்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

**நகம் பராமரிப்பு :–** நகங்களை வெட்டும் முன் எண்ணெய்யை தடவிவிட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.

சிலருக்கு நகம் கடினத் தன்மையுடன் இருப்பதால், நகத்தை வெட்டுவதற்கு கஷ்டமாக இருக்கும். அப்படிப்பட்டவர்கள் குளித்தவுடன் நகம் வெட்டினால், நகம் ஈரத் தன்மையுடன் இருப்பதால், எளிதாக வெட்ட வரும். அதே போல், தேங்காய் எண்ணெய் தடவி சிறிது நேரம் கழித்து வெட்டினாலும் எளிதாக வெட்டலாம்.

நகங்கள் அடிக்கடி உடைந்து போகிறவர்கள், சிறிதளவு பேபி ஆயிலில் நகங்களை மூழ்கும் படி வைத்தால், நகங்கள் உறுதியாகும்.

ஈரமாக இருக்கும் போது ஷேப் செய்தால், நகங்கள் உடைவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, நகங்கள் ஈரமாக இருக்கும்போது ஷேப் செய்வதை தவிருங்கள்.

கிளிசரின் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து, அதை நகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால், நகங்கள் பளபளப்பாக இருக்கும். அதே போல், பாதாம் எண்ணெயை நகங்களில் பூசி சிறிது நேரம் கழித்து, கடலை மாவினால் கழுவினாலும் நகம் பளபளப்படையும். மாதத்திற்கு ஒரு முறை இப்படி செய்ய நல்ல பலன் கிடைக்கும்.

ஆலிவ் எண்ணெயை மிதமாக சூடுபடுத்தி அதை விரல்களில் தேய்த்து சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு தினமும் செய்து வந்தால் நகங்கள் நன்றாக வளரும்.

மிதமான சூடுள்ள பாலில் பஞ்சை நனைத்து அதை வைத்து நகங்களை தேய்த்து சுத்தப்படுத்தினால், நகங்களில், காணப்படும் அழுக்குகள் நீங்கி நகங்கள் பளபளப்பாகும்.


நகங்கள் உறுதியற்று உடைவதற்கு இரும்பு மற்றும் கால்சியம் போன்ற சத்துக்குறைபாடுகளே காரணம். எனவே நகங்கள் ஆரோக்கியமாக வளர ஊட்டச்சத்து நிறைந்த காய்கறிகள் மற்றும் உணவு வகைகளை சாப்பிட வேண்டும்.

**பாத வெடிப்பு நீங்க** :- பாத வெடிப்பிருந்தால் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை பெடிக்யூர் செய்து கொள்ளலாம்.

உப்பு, ஷாம்பூ, எலுமிச்சம் பழச்சாறு கலந்த வெந்நீரில் கால்களை ஊற வைத்துக் கழுவலாம்.

அதிக வேலைகள் காரணமாக கால்களில் வலி எடுத்தால் கால்களை சுடுதண்ணீரில் ஊற வைத்தால் சரியாகும்.

பாதத்தில் உள்ள வெடிப்பு நீங்க விளக்கெண்ணை ஒரு ஸ்பூன், பன்னீர் இரண்டு ஸ்பூன், எலுமிச்சம் சாறு ஒரு ஸ்பூன் மூன்றையும் கலந்து வெந் நீரில் பத்து நிமிடம் காலை ஊறவிட்டு, பின்பு இக்கலவையைப் பூசிவர வெடிப்பு நீங்கும்.



மற்றவர்கள் மனதை படிக்க
நான் கடவுளும் அல்ல
கோபத்தை கட்டுப்படுத்தி வாழ
நான் புத்தரும் அல்ல
கிடைக்காத அன்பிற்காக
ஏங்கும்
ஒரு சராசரி மனுஷி
என்னுள் சுயநலங்கள்
சிலதாகினும்
அதில் பொதுநலமும்
கலந்திருப்பதை
மறவாதீர்கள்...




## முகச்சுருக்கம் நீங்கி முகம் பளபளவாக

தினமும் பாலில் தேவையான அளவு தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் எந்த நோய்களையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலை உடல் பெற்று விடும். முகம் அழகாகவும், உடல் பளபளப்பாகவும் இருக்கும்.

அதிகாலையில் வெறும் வயிற்றில் அத்திப்பழத்தைச் சாப்பிட்டுவந்தால் உடல் அழகும், இளமையும் நாளுக்கு நாள் அதிகமாகும் என்று பழங்கால அரேபிய மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

முகச் சுருக்கத்தை போக்க தேங்காய் எண்ணையில் மஞ்சத்தூளை போட்டுக் குலைத்து உடம்பிற்கு தடவி, பயத்தமாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

தினமும் முகத்தில் ஆலிவ் எண்ணெய் பூசி வர முகச்சுருக்கம் நீங்கி பளபளப்பாக இருக்கும்.

ஆரஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.

உலர்ந்த ரோஜா இதழ்களுடன் சிறிது பன்னீரும் சந்தனமும் அரைத்து முகத்தில் தடவ தோலின் நிறம் பொலிவு பெறும்.

பால், கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.



தொகுப்பு :- சப்தஹி

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

நிர்மாணத் துறையினருக்கு ஊக்கமளித்தல், செயலிழந்திருக்கும் பொருளாதாரத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கான வெற்றிகரமான ஒரு மூலோபாயமாகும். அதன்படி, நாங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ள 100,000 கி.மீ வீதி அபிவிருத்தி திட்டம், பத்தாயிரம் பாலங்கள் அமைத்தல், நாடு முழுவதும் குளங்களை புனரமைக்கும் நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம், 'ஒரு கிராமத்திற்கு ஒரு வீடு' என்ற கருப்பொருளின் கீழ் 14,000 கிராமப்புற வீடுகளை நிர்மாணித்தல், நகர்ப்புற சேறிப்புரங்களில் வசிப்போர், குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டுபவர்களுக்காக ஒரு லட்சம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம், தோட்ட மக்களுக்கு 4,000 வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் நாடு முழுவதும் மக்கள் செறிவாக உள்ள பகுதிகளில் நடைபாதைகள் அமைத்தல் போன்ற திட்டங்கள் பொதுமக்களின் நலனுக்கும் பொருளாதாரம் புத்துயிர் பெறுவதற்கும் நேரடியாக பங்களிக்கும். விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய மூன்று துறைகளின் வளர்ச்சியின் மூலம் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டிற்கான தடைகளை அகற்றவும் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். நாட்டின் பொருளாதார மையப்பகுதியை வெளிநாட்டினருக்கு விற்கக் கூடாது என்ற கொள்கை எவ்வித மாற்றமும் இன்றி பின்பற்றப்படுவதுடன், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதைத் தடுக்க பல்வேறு திட்டங்கள் குறித்து தவறான வியாக்கியானங்களை முன்வைப்போரின் அரசியல் உள்நோக்கங்களை பெரும்பான்மையான மக்கள் அறிவுபூர்வமாக ஆராய்வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

எங்கள் நாட்டின் மக்களையும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகங்களை பாதிக்கும் காலாவதியான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை மாற்றவும் புதுப்பிக்கவும் நான் இப்போது ஒரு விசேட ஜனாதிபதி செயலணியை அமைத்துள்ளேன். பல காலமாக விவாதிக்கப்பட்டாலும் செயற்படுத்தப்படாதிருந்த இந்த செயன்முறையை நாங்கள் இப்போது ஆரம்பித்துள்ளோம். இந்த குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது நாட்டின் எதிர்கால பொருளாதார மேம்பாட்டு செயன்முறைக்கு பெரும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

21 ஆம் நூற்றாண்டு அறிவு மைய நூற்றாண்டாக கருதப்படுகிறது. நாட்டின் வளர்ச்சிக்கு மனித வளங்கள் மிக முக்கியமானவை. அறிவு மற்றும் திறன்கள் நிறைந்த எதிர்கால தலைமுறையை உருவாக்க கல்வித்துறையில் சீர்திருத்தத்தின் அவசியம் குறித்து "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி, கல்வித்துறையில் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ள ஒரு தனியான இராஜாங்க அமைச்சை நாங்கள் நிறுவியுள்ளோம். இந்த சீர்திருத்தங்களைச் செய்வதற்குத் தேவையான நிபுணத்துவ உதவியைப் பெறும் நோக்கில் இரண்டு செயலணிகள் நிறுவப்பட்டன. இவர்களது பரிந்துரைகளை அமுல்படுத்துவது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை இவ்வருடம் 10,000 அல்லது 30% ஆக அதிகரித்துள்ளது. அரச தொழில்நுட்பக் கல்லூரிகளில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை 100,000லிருந்து 200,000 ஆக உயர்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்களின் கொள்ளளவை அதிகரிக்கும் பொருட்டு, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் நகர்ப்புற பல்கலைக்கழக அமைப்புக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கல்வி சீர்திருத்த திட்டங்களை செயல்படுத்துவதை விரைவுபடுத்துவோம். அதன்படி, அடுத்த சில ஆண்டுகளில் கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க தரமான முன்னேற்றம் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

நவீன உலகில் எமது பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்ள, புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஒரு சமூகத்தை எமது நாட்டில் உருவாக்க வேண்டும்.

போட்டித்தன்மையுடன் வெற்றிபெற, விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் போன்ற அனைத்து துறைகளும் எதிர்காலத்தில் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும். இதற்கு உதவும் வகையில், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் தொழில்நுட்ப புத்தாக்க கலாச்சாரத்தை உருவாக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைகளுக்கு ஏற்ப, பொருளாதார அபிவிருத்திக்கு அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், புத்தாக்கங்களை ஊக்குவிக்கவும் அரசாங்கம் குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்கும். தொழில்நுட்ப துறைகளுக்கு ஏற்கனவே பல வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் தொழில்நுட்பத்திற்காக ஒரு தனியான அமைச்சு நிறுவப்பட்டு அதை எனது பொறுப்பின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த அமைச்சின் மூலம், தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள் மற்றும் கட்டமைப்புகளை உருவாக்குவது, அத்துடன் அரச பொறிமுறை மற்றும் சந்தை செயன்முறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கான ஒரு கருவியாக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் நிர்வாகத்தை விரிவுபடுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும். தொழில்நுட்பத் துறையில் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தெரிவுசெய்யப்பட்ட ஐந்து மாவட்டங்களில் ஐந்து தொழில்நுட்ப பூங்காக்களை அனைத்து வசதிகளுடன் திறக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஊக்குவிப்புகள் மூலம் தொழில்நுட்பத் துறையில் ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டுவருவதற்கான வாய்ப்பு எமக்குக் கிடைக்கிறது.

07ஆம் பக்கத் தொடர்ச்சி...

**அரசு இப் போராட்டத்தை தடுக்க இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படை பொலிசார் புலனாய்வாளர்கள் என அனைவரையும் களமிறக்கியுள்ள நிலையிலும் இப்போராட்டத்தை கொரோனா வைரசை காரணம் காட்டி சமூக இடைவெளி பிரச்சனை மற்றும் தனிமைப்படுத்தல் சட்டம் என நீதிமன்றங்களை நாடி சில அரசியல் தலைமைகளுக்கும் சமய தலைவர்களுக்கும் எதிரான நீதிமன்ற ஆணையை பெற்று தடுத்து வரும் செயல்பாட்டில் பொலிசார் ஈடுபட்டுவரும் நிலையில் போராட்டமானது தொய்வின்றி முழு வீரியத்துடன் அத்தனை அடக்கு முறைகளையும் உடைத்தெறிந்து ஓர் தீர்க்கமான நிலையில் சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. சிறுபான்மை இனங்கள் இரண்டும் ஒற்றுமையுடன் தமது இனத்தின் உரிமைக்காக முழுவீச்சுடன் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் மலையக மக்களும் மலையக தமிழ் தலைமைகளும் இப்போராட்டத்தில் பங்கேற்காமை வருத்தத்திற்குரியதே அவர்களின் சம்பளம் தொடர்பான விடயமும் இப்போராட்டத்தில் இடம்பெறுகின்றமையால் அவர்களும் இப்போராட்டத்தில் இணைந்த அடக்கியாள முற்படும் இவ் பேரினவாத அரசின் உண்மையான முகத்திரையை ஐ.நா மனித உரிமை மாநாட்டில் பிரதிபலிக்க செய்ய கைகோர்த்தல் அவசியமாகின்றது. இத்தொடர் போராட்டமானது மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டமாக மாற வேண்டும். அனைத்து சிறுபான்மை இன மக்களும் ஓரணியில் இப்போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் இப் போராட்டத்தின் வீரியத்தன்மை வரப்போகும் ஜெனிவா மாநாட்டில் எதிரொலிக்க வேண்டும் இப்போராட்டமானது தனியே பொலிகண்டியுடன் நின்று விடாமல் தொடர்ச்சியாக அகிம்சை வழியான ஊர்வலங்கள் சத்தியாக்கிரகங்கள் மக்கள் எழுச்சி போராட்டங்கள் என அடுத்தடுத்து இடம்பெற வேண்டும் ஓர் போராட்டம் முடிவடைந்தவுடன் சோர்ந்து போய் இம் மட்டும் காணும் என்ற நிலையை விட்டு சிறுபான்மை இனங்களுக்கான ஓர் நிரந்தர தீர்வை பெற மட்டும் தொடர்ச்சியாக தொடர் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும் இப்போராட்டங்கள் நிச்சயமாக எமக்கான ஓர் நிரந்தர தீர்வை பெற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை ஆனால் முன் குறிப்பிட்டது போல் இப்போராட்டங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்ட நிலையில் இடம் பெற வேண்டும். மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்கள் பல உலகில் வெற்றியடைந்துள்ளன. இனமத மொழி கடந்து அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை களைத்து விட்டு ஓரணியில் ஓர் கொள்கையுடன் தொடர் போராட்டங்களை மேற்கொண்டால் அது உலக நாடுகளில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தும் பூகோள அரசியலிலும் வல்லரசுகளின் பிராந்திய போட்டிகளிலும் ஏற்கனவே சிக்கி தவிக்கும் இலங்கையை இத் தொடர் போராட்டங்கள் மேலும் சிக்கலாக்கும் உலகில் ஏதாவது ஓர் மிகப்பெரும் வல்லரசு எமது பக்கம் தனது நேசக்கரத்தை திரும்பும் அது ஐ.நா மனித உரிமை மாநாட்டில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தும் ஆகவே தொடர் போராட்டங்களை மக்கள் மயப்படுத்தி மேற்கொள்வதே காலத்தின் தேவையாகும். எழுச்சியுடன் வெற்றிபெறுவோம்.**

இதுவரை நான் கூறியவை அனைத்தும் முழு உலகையும் முடக்கிவிட்டிருந்த கொவிட் தொற்றுநோயை எதிர்கொண்ட நிலையில், ஒரு வருட குறுகிய காலாத்திற்குள் செய்யப்பட்டுள்ளன என்பதை மறந்துவிடக் கூடாது என்று இந்த நாட்டின் விவேகமான மக்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும் சுமார் 4,500 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணியை ஈட்டித்தந்த சுற்றுலாத் துறை, இந்த நாட்டில் கிட்டத்தட்ட மூன்று மில்லியன் மக்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை வழங்கியது. இன்று, இந்த மக்கள் தமது வாழ்வாதார வழிகளை இழந்து கடும் நெருக்கடியில் உள்ளனர். இந்த மக்களுக்கு நாம் விரைவில் தீர்வுகளை வழங்க வேண்டும். எனவே, சுகாதார வழிகாட்டல்களை கண்டிப்பாக பின்பற்றி, முறையான திட்டத்தின் கீழ் சுற்றுலாத்துறையை படிப்படியாக மீள ஆரம்பிக்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். நான் எப்போதும் சூழலை நேசிப்பவன். நான் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக இருந்தபோது, நகரங்களை அழகுபடுத்தல், வீடமைப்பு அபிவிருத்தி, நடைப்பாதைகள் மற்றும் நகர்ப்புற பூங்காக்கள் போன்ற அனைத்து திட்டங்களிலும் சூழலைப் பாதுகாத்து அந்த அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்தேன். வருங்கால சந்ததியினருக்காக சூழலைப் பாதுகாக்க இன்றும் எனது அரசு விசேட கவனம் செலுத்தி வருகிறது. நகர்ப்புற வனப் பூங்காக்களை அமைத்தல், பசுமை நகர திட்டமிடல், பசுமை திட்டங்கள், தேசிய மர நடுகை திட்டங்கள், கால்வாய்கள் மற்றும் நீர்த்தேக்கங்களை புனரமைத்தல், தரிசு நெல் வயல்களை மீண்டும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்துதல், சேதன உரங்களை பயன்படுத்துவதை ஊக்குவித்தல், பிளாஸ்டிக் பயன்பாட்டை கட்டுப்படுத்துதல் ஆகிய இவை அனைத்தும் இந்த அரசாங்கம் பேண்தகு சுற்றாடல் முகாமைத்துவ கொள்கையை நடைமுறைப்படுத்தி வருவதை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கையின் அடிப்படை என்னவென்றால், பொருளாதார சுதந்திரம் இல்லாமல் பொருளாதாரத்தின் உண்மையான பெறுபேறுகளை அடைய முடியாது என்பதாகும். வறுமையை ஒழித்தல், அனைத்து குடிமக்களின் முன்னேற்றத்திற்கும் சமமான வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் சுதேச வர்த்தகர்களை ஊக்குவித்தல் போன்ற அரசாங்கத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள எங்களுக்கு ஒரு தூய்மையான, வினைத்திறன் வாய்ந்த அரச சேவை அத்தியவசியமானதாகும். எமது நாட்டின் அரச சேவை என்பது நாடு முழுவதும் பரவியுள்ள ஒரு வலுவான பொறிமுறையாகும். உலகின் பல நாடுகளுக்கு கிடைக்காத மிகப்பெரிய வாய்ப்பு இது. எனவே, இந்த வலுவான பொறிமுறையானது நாட்டின் தீர்மானம் எடுக்கும் செயன்முறைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இருப்பினும், இன்று ஒவ்வொரு மட்டத்திலும் முடிவெடுப்பதில் ஒரு பலவீனத்தைக் காண்கிறோம். மிகவும் எளிமையான நிறுவனம் சார்ந்த விடயங்கள் தொடர்பான முடிவுகளில் கூட, அதிகாரிகள் முடிவுகளை எடுப்பதில்லை, அவற்றை அமைச்சரவையிடம் முன்வைக்கின்றார்கள். ஒவ்வொரு விடயத்திலும் சுற்றறிக்கைகளை எதிர்பார்க்கின்றனர்.

**தொடரும்...**

# முஸ்லீம்களின் ஜனாசா எரிப்பு விவகாரத்தில் வெள்ளைக்கொடி பிடிக்கும் சாணக்கியன்

**கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**



**கடந்தவாரத் தொடர்ச்சி...**

இந்த உண்மையை பொய் என்று சொல்வதற்கு நான் ஒருவன் தான் குரல் கொடுக்க வேண்டும். நான் போய் அனை வரையும் அழைத்து இப்படி இல்லை இது பொய் என்று கூற முடியாது. பொய்யைச் சொல்வது மிகவும் இலகுவான தொரு விடயம். உதாரண மாக தேர்தல் காலங்களில் ஏராளமான பொய்களைக் கூறினார்கள்.

நான் கொரோனா காலத்தில் இராசமாணிக்கம் ஐயாவின் அமைப்பின் ஊடாக 65 இலட்சம் பெறுமதியான நிவாரணங்களை வழங்கி னேன். அதனைப் பாராட்டி பல செய்திகள் வெளிவந்தன. ஆனால் அந்தக் காலத்தில் எதிர்த்தரப்பினர், அந்த அரிசிக்குள் மதுப் போத் தல்களை வைத்து கடத்தி என்னை விளக்கமறியலில் வைத்துள்ளதாக பொய்யான செய்திகள் பரப்பப்பட்டன. அது பொய். பொய்யினை மக்கள் மத்தியில் கூறுவது இலகுவான விடயம். உண்மையான விடயங்களுக்கு ரேட்டிங் குறைவு. உண்மையைக் கூறுவது கடினம்.

**கேள்வி : வியாழேந்திரனுக்கும் உங்களுக்குமான உறவு பற்றி?**

பதில் :- போட்டி என்பதை விட சில இடங்களில் நாங்கள் உண்மையைக் கூறினால் அவருக்கு மக்கள் மத்தியில் செல்வதற்கு சில இடங்களில் கடினமாக இருக்கும். அதனை அவருடைய ஆதர வாளர்கள் நியாயப்படுத்த வருவார்கள். நாங்கள் ஒன்றைச் சொல்வோம் அவர் இன்னொன்றைக் கூறுவார். அந்த இடத்தில் மக்கள் உணர்ந்துகொண்டு உண்மையைப் புரிந்து கொள்வார்கள். வியா ழேந்திரன் பாவம். அவருடைய ஆரம்பம் தமிழ்த் தேசியத்தின் ஊடாக வந்தது. அவரது சில சில தேவைகளுக்காகவா அல்லது எதற்காக மாறி னார் என்பது பற்றி மக்கள் நன்கு அறிவார்கள்.

என்னைப் பொறுத்தவரை அவரும் இன்று கவலையுடன் தான் இருப்பார். ஏனெனில் அவராலும் மட்டக்களப்பு வாழ் மக்களுக்கு எதுவும் செய்ய முடியவில்லை. தொல்பொருள் திணைக்களப்பிரச்சினைகளை அமைச்சருடன் வந்து பார் வையிட்டுவிட்டு அமைச்சர் கூறுகின்ற விடயங்களுக்கு தலையை ஆட்டிவிட்டு செல்கின்ற அளவில் அவர் இருக்கிறார். அவர் தவறான வழியில் போய்விட்டதாக உணர்ந்துவிட்டார். ஆனால் போய்விட்டார். பாராளுமன்ற உறுப்பினர் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் தன்னுடைய தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். அடுத்த ஐந்து வருடங்களில் அவர்

**கேள்வி : அரசாங்கம் தமிழ் மக்களுக்கான தீர்வுகளைத் தரும் என்கிற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா? அல்லது தராவிட்டால் உங்களது அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்ன?**

பதில் : கோட்டபாய ராஜபக்ஸ என்பவர் ஐந்து வருடம் தான். ஒரு வருடம் முடிவடைந்திருக்கிறது. இன் னும் நான்கு வருடங்கள் தான் இருக்கிறது. டட்லி செல்வா ஒப்பந்தம். பேச்சு நடத்தினோம். பண்டா செல்வா ஒப்பந்தம். சந்திரிக்காவுடனான ஒப்பந்தம். மஹிந்த ராஜபக்சவுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். அடுத்து நல்லாட்சி அரசுடன் பேச்சுக்களை நடத்தினோம். இந்த அரசுடனும் பேச்சுக்களை நடத்துவோம்.

நாங்கள் அவர்களிடம் கேட்கவேண்டிய தேவை இல்லை. கேட்கவேண்டிய சூழல் அமைந்திருக்கிறது. இது எங்களுக்குச் சொந்தமான நாடு. பிரித்தானியர் இந்நாட்டை விட்டுச் செல்கின்றபோது எமது உரிமைகளைத் தராமல் எல்லோரையும் ஒன்றாக்கி விட்டுச் சென்றதால் ஏற்பட்ட நிலைமை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் பலமாக இருக்கும். அடுத்த தேர்தலில் நான் நினைக்கிறேன் 20 ஆசனங்கள் வந்தாலும் வரும். என்னை இளை ஞர்கள் சந்தித்தார்கள். எங்களுடன் இணைந்து பயணிக்க ஆர்வமாக இருக்கிறார்கள். மாற்றம் வந்து கொண்டிருக்கிறது. உண்மையான விடயங்களுக்கு நிச்சயமாக மக்கள் மத்தியில் இடம் இருக்கும். எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் நடந்தால் மாற்றத்தை நாங்கள் காணக்கூடியதாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.

**கேள்வி : அடக்குமுறைகளின் உச்சக்கட்டம் தான் இந்த மண்ணில் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு மௌனிக்கப்பட்டது. மீண்டும் இந்நாட்டில் அடக்குமுறைகள் அதிகரிக்கப்படுகின்ற போது இளைஞர்கள் ஆயுத மேந்துகின்ற சூழ்நிலைக்குள் தள்ளப்படுவார்களா? இல்லையா?**

பதில் : ஆயுதம் ஏந்திப்போராடும் காலங்கள் உலக நாடுகள் ஏற்றுக் கொண்டதன் படி இப்பொழுது முடிவடைந்துவிட்டது. ஆயுதப் போராட்டம்என்பதுவிடுதலைப் போராட்டம் என்றுதான் கூறலாம். பல உலக நாடுக ளின் சிறுபான்மை மக்கள் அல்லது பாதிக்கப்பட்ட ஒரு இனம் ஆயுதமேந்திப் போராடினார்கள். அது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின்னர் விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டார்கள். இனிவரும் காலங்களில் ஆயுதக் கலாச்சாரம் தலை தூக்குமா என்பது முடியாத காரியம்.

ஆனால் நிச்சயமாக போராட்டங்கள் நடக்கும். ஜனநாயக ரீதியான போராட்டங்கள் இன்னும் வெகுவாக நடக்கும். தமிழரை விட இஸ்லாமியர்கள் அந்தப் போராட்டங்களை கையில் எடுப்பதைக் காண முடியும். தமிழர்களை அடக்கி அடக்கி அரசு சிறிய ஓய்வு ஒன்றினைத் தந்திருக்கிறார்கள். முஸ் லீம் மக்களை குழப்ப ஆரம்பித் திருக்கிறார்கள். அளுத்கம தொடக்கம் மாவனல்ல வரை மற்றும் திகன போன்ற இடங்களில் எல்லாம் பள்ளிவாசல்களை உடைத்து அடிப்படையான அவர்களின் ஜனாசா விடயத்தில் கூட கைவைத்திருக்கிறார்கள்.

அரசின் இயலாமை காரண மாக சிங்கள மக்களை திருப்திப்படுத்துகின்ற நட வடிக்கையா இது என்று கூட சந்தேகம் எழுந்திருக்கிறது.

**தொடரும்...**

**நேர்காணல் – இரணியன்**




## முதல்முறையாக விண்வெளி செல்லும் சாதாரண பொதுமக்கள்! சொந்த செலவில் அழைத்து செல்லும் அமெரிக்க தொழிலதிபர்

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விண்வெளிக்கு செல்லும் உலகின் முதல் all-civilian மிஷனை இந்த ஆண்டின் இறுதிக்குள் செயல்படுத்துவதாக அறிவித்துள்ளது. எலன் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் ஒரு தொண்டு நிறுவனத்துடன் இணைந்து Inspiration 4 எனும் சாதாரண பொது மக்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்தை அறிவித்துள்ளது. இது உலகின் முதல் all-civilian மிஷன் என கூறப்படுகிறது.

இந்த ஆண்டின் இறுதிக்குள் இந்த திட்டத்தை செயல்படுத்தவுள்ளதாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் திங்கட்கிழமை அறிவித்துள்ளது. விண்வெளிக்கு சென்று மீண்டும் பூமியில் தரையிறங்கும் ஸ்பேஸ் எக்ஸின் Dragon விண்கலத்தில் பயணிக்கவுள்ளனர். இந்த விண்கலம் 7 பேரை சுமந்து செல்லும் திறன் கொண்டது.

இந்த விண்கலத்தை அமெரிக்க தொழிலதிபரும், பைலட்டுமான Jared Isaacman எனும் கோடீஸ்வரர் விலைக்கு வாங்கியுள்ளார். அவர் தான் 3 சாதாரண பொதுமக்களை இந்த பயணத்தில் விண்வெளிக்கு அழைத்து செல்கிறார்.

அவர்களில் ஒருவராக அமெரிக்காவின் செயின்ட் ஜுட் குழந்தைகள் நல மருத்துமனையில் பயிற்றும் ஒரு பெண் செவிலியர் தேர்தெடுக்கப்பட்டுள்ளதாகவும், மற்றோருவர் அதே மருத்துவமனைக்கு அதிக நன்கொடை அளித்த ஒரு நபர் தேர்வாகியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தேர்வு செய்யப்பட்டுள்ள 3 பேரின் முழு விவரங்கள் வரும் வாரங்களில் அறிவிக்கப்படவுள்ளதாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. பயணத்திற்கு முன்பு அவர்கள் அனைவருக்கு முறையான பயிற்சி வழக்கப்படவுள்ளது.



## யூடியூப் தொடர்பில் வெளியாகியுள்ள சுவாரஸ்யமான தகவல்

முன்னணி வீடியோ பகிரும் தளமாக யூடியூப் காணப்படுகின்றது. கூகுள் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் இத் தளமானது வீடியோக்களை அப்லோட் செய்பவர்களுக்கு பணம் ஈட்டும் வாய்ப்பினையும் வழங்கி வருகின்றது. இப்படியிருக்கையில் தற்போது இத் தளம் தொடர்பில் சுவாரஸ்யமான தகவல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதாவது கடந்த 3 வருடங்களில் வீடியோக்களை அப்லோட் செய்யும் பயனர்களுக்கு சுமார் 30 பில்லியன் டொலர்களை யூடியூப் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை யூடியூப் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான Susan Wojcicki தெரிவித்துள்ளார். அத்துடன் 2019 ஆம் ஆண்டில் அமெரிக்க பொருளாதாரத்தில் 16 பில்லியன் டொலர்கள் பங்களிப்பினை யூடியூப் செய்துள்ளது. இந்த பெறுமதியானது 345,000 முழு நேர வேலைவாய்ப்பின் ஊடாக பெறப்படும் வருமானத்திற்கு சமனாகும்.



## பயனர்களை கவர புது அம்சங்களை வழங்கும் சிக்னல்


சிக்னல் நிறுவனம் தனது குறுந்தகவல் செயலியில் தொடர்ந்து புது அம்சங்களை வழங்கி வருகிறது. புதிய அம்சங்கள் ஐஒஎஸ் மற்றும் ஆண்ட்ராய்டு சாதனங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

சிக்னல் செயலியில் புதிதாக சாட் வால்பேப்பர், அனிமேடெட் ஸ்டிக்கர், ப்ரோபைல் பகுதியில் அபவுட் எனும் உட்பிரிவு உள்ளிட்டவை இணைக்கப்பட்டு இருக்கின்றன.

அதில் முதற்கட்டமாக பீட்டா பதிப்பில் 24 அனிமேடெட் ஸ்டிக்கர்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

இதனை தொடர்ந்து ஐபோன் பயனர்களுக்கு அழைப்பின் போது குறைந்த டேட்டா பயன்படுத்த கோரும் ஆப்ஷன் வழங்கப்படுகிறது.

மேலும் இந்த அப்டேட் இதுவரை ஆண்ட்ராய்டு பயனர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




## 59 செயலிகள் மீது நிரந்தரத் தடை .. இந்திய ஊழியர்களைப் பணிநீக்கம் செய்ய முடிவு

2020ல் மத்திய அரசு இந்திய மக்களின் தகவல் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு சுமார் 59 சீன செயலிகளைத் தற்காலிகமாகத் தடை செய்த சம்பவம் பலரை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்நிலையில் தற்போது சுமார் 59 செயலிகள் மீது நிரந்தரமாகத் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

மத்திய அரசின் இந்த உத்தரவால் 59 செயலிகளில் அதிக வாடிக்கையாளர்களை வைத்திருந்த ஷாட் வீடியோ செயலியான டிக்டாக் மற்றும் ஹலோ ஆகியவற்றின் தாய் நிறுவனமான பைபிட் டான்ஸ் இந்திய ஊழியர்களைப் பணிநீக்கம் குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதனை தொடர்ந்து தற்போது இந்தியாவில் 20,000க்கு அதிகமான ஊழியர்கள் சீன நிறுவனங்களில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் டிக்டாக் மற்றும் ஹலோ செயலியில் பணியாற்றிய 2000 ஊழியர்களில் பெரும்பாலானோருக்கு வருகிற ஜனவரி 29ஆம் திகதி தான் கடைசி நாளாக அறிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



# விளையாட்டு செய்திகள்

## எனது வாழ்க்கையைத் திரைப்படமாக எடுக்க விரும்புகிறார்கள் - நடராஜன்

'எனது வாழ்க்கையைத் திரைப் படமாக எடுக்க விரும்புகிறார்கள் என இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் டி.நடராஜன் தெரிவித்தார். சமீபத்தில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் இந்திய அணியினருடன் வலைப்பயிற்சி பந்து வீச்சாளராகச் சென்ற இடக்கை வேகப்பந்து வீச்சாளர் டி.நடராஜன்.

தமிழகத்தை சேர்ந்த அவர் அந்த தொடரில் ஒருநாள், 20 ஓவர், டெஸ்ட் போட்டியில் அறிமுக வீரராக களம் கண்டதுடன், பந்து வீச்சில் சிறப்பான பங்களிப்பை அளித்து அனைவரின் கவனத்தையும் கவர்ந்தார்.

இந் நிலையில் 29 வயதான நடராஜன் ஊடகமொன்றுக்கு அண்மையில் செவ்வியொன்றினை அளித்திருந்தார். குறித்த செவ்வியில் "ஐ.பி.எல். போட்டியிலிருந்து கடந்த 6 மாதம் ஓய்வு இல்லாமல் விளையாடி இருக்கிறேன். தற்போது எனக்கு இந்திய கிரிக்கெட் சபை சில நாட்கள் ஓய்வு கொடுத்தார்கள்.

எனது உடல் வலிமையில் ஏற்றம் காண என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து இந்திய கிரிக்கெட் சபை எனக்கு ஆலோசனை வழங்கி இருக்கிறது.

அடுத்த 3 வாரம் என்ன பயிற்சி செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதனை செய்ய இருக்கிறேன்.

ஐ.பி.எல். போட்டி முதல் அவுஸ்திரேலிய தொடரில் ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டி வரையில் மணிக்கு 135 கிலோ மீற்றர் வேகத்தில் பந்து வீசினேன். ஆனால் டெஸ்டில் எனது பந்து வீச்சு வேகம் குறைந்து விட்டது.

எனது உடல் வலிமை குறைந்தது இதற்கு காரணமாக இருக்கலாம். விஜய் ஹசாரே கோப்பை போட்டியில் இந்திய கிரிக்கெட் சபை அனுமதி அளித்தால் தமிழக அணிக்காக விளையாடுவேன். இந்திய கிரிக்கெட் சபை அனுமதி கிடைக்காததால் சையது முஷ்டாக் அலி கோப்பை போட்டியில் விளையாடவில்லை.

ஐ.பி.எல். போட்டிக்கு முன்பு விராட்கோலி, டிவில்லியர்ஸ், டோனி போன்ற வீரர்களின் விக்கெட்டை வீழ்த்த வேண்டும் என்பது கனவாக இருந்தது. அவர்களது விக்கெட்டை கைப்பற்றியது மிகுந்த மகிழ்ச்சி அளித்தது.

அதனை நினைத்து பார்க்கையில் பல நாட்கள் தூக்கம் வந்ததில்லை. ஆஸ்திரேலிய தொடர் முடிந்து வந்த பிறகு இன்னும் கூட ரசிகர்கள் பலர் என்னை பார்க்க வீட்டுக்கு வருகிறார்கள். அது மகிழ்ச்சியாக இருந்தாலும், வித்தியாசமான அனுபவமாகவுள்ளது.

நான் எப்பொழுதும் சாதாரணமான மனிதனாக இருக்கவே விரும்புகிறேன். எனது வாழ்க்கையை சினிமா படமாக எடுக்க டைரக்டர்கள் சிலர் சந்திக்க வீடு தேடி வந்தனர். ஆனால் இப்போது எனக்கு அதில் ஆர்வம் இல்லை. கிரிக்கெட்டில் முழு கவனத்தையும் செலுத்தவே விரும்புகிறேன்.

2015-ம் ஆண்டில் எனது பந்து வீச்சு சந்தேகத்துக்குள்ளாகி தடை விதிக்கப்பட்ட போது வாழ்க்கையே முடிந்துவிட்டது என்று நினைத்தேன். மனதளவில் வெகுவாக பாதிக்கப்பட்டேன். அப்போது எனக்கு நண்பர்களும், பயிற்சியாளர்களும் உத்வேகம் அளித்தனர்.

தமிழக அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் சுனில் சுப்பிரமணியம் எனது பந்து வீச்சை சரி செய்ய உதவிகரமாக இருந்தார். அவரது அறிவுரையை பின்பற்றி கடுமையாக உழைத்தேன். அதற்கு நல்ல பலன் கிடைத்தது.

மூன்று வடிவிலான (20 ஓவர், ஒருநாள், டெஸ்ட்) போட்டியிலும் தொடர்ந்து விளையாட வேண்டும் என்பதே எனது லட்சியமாகும்" இவ்வாறு தெரிவித்தார்.




## பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தர், லஹிரு திரிமான்ன ஆகியோருக்கு கொவிட்-19

ஸ்ரீலங்கா கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தர் மற்றும் கிரிக்கெட் வீரர் லஹிரு திரிமான்ன ஆகியோர் கொவிட்-19 தொற்றுக்கு ஆளாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கான சுற்றுப்பயணத்துக்கு தயாராகி வரும் நிலையிலேயே தொற்று இனங்காணப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் இன்று தெரிவித்துள்ளது.

பயிற்சியாளர்கள். பந்துவீச்சாளர்கள் அடங்கலாக 36 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் சோதனையிலேயே இவர்கள் தொற்றாளர்களாக கண்டறியப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## ஐபிஎல் தொடரில் புதிய சாதனை படைத்த தோனி!

ஐபிஎல் தொடரில் இதுவரை அதிக சம்பளம் வாங்கிய வீரர் என்ற சாதனையை சென்னை சூப்பர் கிங்ஸ் (Chennai Super Kings) அணியின் தலைவரான மகேந்திரசிங் தோனி படைத்துள்ளார்.

ஐபில் தொடரானது ஆரம்பித்த 2008ஆம் ஆண்டிலிருந்து 2020ஆம் ஆண்டு வரை தோனி சம்பளமாக இந்திய மதிப்பில் 137 கோடி ரூபா வாங்கியுள்ளார்.

இதேபோல் நடப்பு ஆண்டில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடவுள்ள தோனிக்கு, 15 கோடி ரூபா சம்பளம் வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் மொத்தம் 152 கோடி ரூபா சம்பளம் ஈட்டியுள்ள தோனி, ஐபிஎல் தொடரில் அதிக சம்பளம் வாங்கிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.



# உலக செய்திகள்

## கொவிட்- 19: பாகிஸ்தானில் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பமானது!

சீன அரசானது கொரோனாத் தொற்றுக்கான 5 லட்சம் தடுப்பூசிகளை பாகிஸ்தானுக்கு நன்கொடையாக வழங்கியிருந்தது. இந் நிலையில் பாகிஸ்தானில் தடுப்பூசி செலுத்தப்படும் பணி ஆரம்பமானது. இதனை அந் நாட்டுப் பிரதமர் இம்ரான் கான் தொடங்கி வைத்தார்.

அந்தவகையில் முதலில் சுகாதாரத் பணியாளர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் என்ற அடிப்படையில் தடுப்பூசி செலுத்தப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சீனாவின் சீனோபார்ம் தடுப்பூசி 79 % இருந்து 89 % வரை செயற்திறன்மிக்கது என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது 500 தடுப்பூசி மையங்கள் மூலம் ஒரு நாளைக்கு 40 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் இது அதிகரிக்கப்படும் என பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## டுவிட்டர் நிறுவனத்திற்கு மத்திய அரசு எச்சரிக்கை!

இந்தியாவில் வேளாண் சட்டங்களை திரும்ப பெற வலியுறுத்தி டெல்லியில் விவசாயிகள் 2 மாதங்களுக்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தவகையில் விவசாயிகள் போராட்டத்தைத் தூண்டியதாக 250 கணக்குகளை மத்திய அரசின் பரிந்துரையின் பேரில் முடக்கிய டுவிட்டர் நிறுவனம், தற்போது கருத்து சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் மீண்டும் குறித்த டுவிட்டர் கணக்குகளை செயற்பட அனுமதித்துள்ளது.

இந் நிலையில் விவசாயிகளின் போராட்டம் குறித்த சர்ச்சை பதிவுகளை நீக்காவிட்டால் சட்டரீதியிலான நடவடிக்கை எடுக்கப்படுமென டுவிட்டர் நிறுவனத்துக்கு மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது




## எகிப்தில் தங்க நாக்குடன் கண்டெடுக்கப்பட்ட மம்மி!

எகிப்தில் 2000 ஆண்டு பழமையான தங்க நாக்கினைக் கொண்ட மம்மியொன்று அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது . அந் நாட்டில் அலெக்சாண்ட்ரியா (Alexandria) பகுதியிலுள்ள டபோசிரிஸ் மேக்னா (Taposiris Magna ) என்ற கோயிலில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்விலேயே குறித்த மம்மி கண்டெடுக்கப்பட்டுள்ளது. எகிப்தின் பழம்பெரும் கோயில்களில் கடந்த 10 வருடங்களாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 16 புதையிடங்களைக் கண்டறிந்துள்ளனர்.

இந்த புதையிடங்களில் பல மம்மிகள் புதைந்திருந்தன. மார்பில் அணிகலன்கள் மற்றும் தலையில் கொம்புகள் வைத்த கிரீடத்தினாலும், மம்மிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் அவை சரியான முறையில் பதப்படுத்தப்படவில்லை. அதில் ஒரு மம்மியின் வாயில் தங்க நாக்கு இருந்ததைக் கண்டு ஆராய்ச்சியாளர்கள் வியப்படைந்தனர். எகிப்து நாட்டு மக்கள் உயிரிழந்தபின் ஒசிரிஸ் என்ற எகிப்து கடவுளுடன் உரையாடுவார்கள் என்று நம்பப்பட்டது. ஒசிரிஸ், எகிப்து நாட்டின் பாதாள உலகின் ஆட்சியாளர் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், இறந்தபின்னும் ஒசிரிஸீடன் எகிப்து மக்கள் பேசுவார்கள் என்பது அந்நாட்டு முன்னோர்களின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையின்படி, இந்த மம்மிக்கு சொந்த நாக்கு அகற்றப்பட்டு இம்மாதிரியான தங்க நாக்கு வைக்கப்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



## அவுஸ்திரேலியாவில் காட்டுத் தீ! 30 வீடுகள் நாசம்

அவுஸ்திரேலியாவில் பரவி வரும் காட்டுத் தீயினால் 30 க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவுஸ்திரேலியாவின் சுவான் ( Swan ) மற்றும் முன்டரிங் (Mundaring), சிட்டரிங்( Chittering), நோர்தாம்( Northam) ஆகிய பகுதிகளில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு தீ வேகமாக பரவி வருவதால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் தீயை அணைக்க 250 க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் போராடி வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. இக் காட்டுத் தீயில் 30க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து நாசமானதுடன் சுமார் 7 000 ஹெக்டர் காட்டுப்பகுதி தீயில் எரிந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.





## 2 ஆம் உலகப் போரில் பங்கெடுத்த கப்டன் டொம் மூர் காலமானார்!

2 ஆம் உலகப் போரில் பங்கேற்ற பிரித்தானிய இராணுவத்தில் பணிபுரிந்த கப்டன் சேர் டொம் மூர் (Tom Moore), உடல்நலக் குறைவால் தனது 100 ஆவது வயதில் காலமானார். இவர் கொரோனா பேரிடர் காலத்தில் முன்கள சுகாதாரப் பணியாளர்களுக்கு நிதி திரட்டுவதற்காக தனது தோட்டத்தில் ஊன்றுகோலின் உதவியோடு 100 சுற்றுகள் நடந்து அதனை வீடியோவாக வெளியிட்டு 53 மில்லியன் டொலர்கள் நன்கொடையாக திரட்டி சாதனை படைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இந் நிலையில் கடந்த 5 வருடங்களாக புற்று நோய்க்கு சிகிச்சை பெற்று வந்த டொம் மூர், கடந்த ஜனவரி மாதம் 22ஆம் திகதி கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இதனையடுத்து உடல்நிலை மேலும் மோசமாகிய நிலையில் உயிரிழந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் அவரது குடும்பத்திற்கு பிரித்தானியாவின் ராணி எலிசபெத், பிரதமர் போரிஸ் ஜோன்சன் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். பிரதமர் போரிஸ் ஜோன்சன் தனது இரங்கல் செய்தியில், டொம் மூர் ஒரு ஹீரோ. உலகத்திற்கே நம்பிக்கையின் சின்னமாக விளங்கியவர் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை


































இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 07.02.2021 அன்று வெளியிடப்பட்டது.